# காசி இந்துப் பல்கலைக் கழகம் கால வரையின்றி மூடப்பட்டது

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 12
இதழ்: 35
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் பங்குனி 4 முஹர்ரம் 8 செவ்வாய்க்கிழமை [17-3-70]

## மாணவர் வன்முறைச் செயலே காரணம்

வாரணாசி, மார்ச் 16
காசி இந்துப் பல்கலைக் கழகம் இன்று காலவரையின்றி மூடப்பட்டது. இன்று அதிகாலை இப்பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த மாணவர்கள் சிலர் பல்கலைக் கழகத்துக்குள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பல்கலைக் கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு மாணவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்கள் வன்முறைச் செயலில் இறங்கினர்கள் பல்கலைக் கழக கட்டிடங்கள் சிலவற்றின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்தும் தளபாடங்களை நொருக்கியும் அட்டகாசம் செய்த அவர்கள் துணைவேந்தரின் இல்லத்தையும்சேதப்படுத்தி விட்டு துணைவேந்தரை சுற்றி வளைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டம்செய்தனர்.

தகவல் கிடைத்து ஆயுதந் தாங்கியபொலிசார் சென்று துணைவேந்தரை மீட்டதுடன் அங்கு நிலைமையைக் கட்டுப்படுத்தினர் இதைத்தொடர்ந்து பல்கலைக் கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டது

# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய

# திறந்த கதவு மூடப்படவில்லை

# பாகுபாடின்றி வழிபாடு

## வழமைபோல் பொங்கல் உற்சவம் ஆரம்பம்

மட்டுவில், திங்கள்
பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பொங்கல் நேற்று வழமைபோல் நடைபெற்றது. ஆலயக்கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. 500க்கும் அதிகமான பக்தர்கள் பொங்கல்வைத்து உள்ளேசென்று அர்ச்சனை செய்தும் வழிபட்டனர்.

வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று ஆரம்பமானது ஆலய சுற்றாடலில்இருபத்தி ஐந்து பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆலயத்தினுள் சென்று எவரும்பொங்கலைப்படைக்கவில்லை உள்ளே படைக்க வேண்டாமென ஆலயவாசலில் அறிவித்தல் ஒன்று

போடப்பட்டிருந்தது. கேணியிலிருந்து நீரிறைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது, குளாய் மூலம் பெறப்பட்ட தண்ணீரையே பெற்று சகலரும் பொங்கல்

## 'திருமுறைகளை பேணினல் கடவுள் நம்பிக்கை ஏற்படும்'

### சுவாமி பிரணவானந்தா கூறுகிறர்

யாழ்ப்பாணம்,செவ்
திருமுறைகளைப் பேணி மாணவ மாணவிகள் படிப்பதால் அவர்கள் நம்பிக்கையுள்ளவர்களாகவும் நல்ல பிரஜைகளாகவும்திகழ முடியும்.'

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள சுவாமி பிரணவானந்த சரஸ்வதி இவ்வாறுகூறினர்.

சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சொற்பொழிவுக நிகழ்த்தினர். அவர் நேற்று கீரிமலையில் தங்கியிருந்த சமயம் அவரைச் சந்தித்த போது அவர் கூறியதாவது:

'பெற்றேர், மாணவர், ஆசிரியர்கள் முக்கோண வழி தத்தம் கடமைகளைச் செவ்வனவே செய்வார்களாயின் நல்ல சமுதாயம் நாட்டில் அமையும். தன்கையே தனக்குதவி என்று நம்பி, தொழிலை மதித்து அறிவாளிகள் தொழிலாளியாக மாறி நாட்டை வளப்படுத்த வேண்டும்''

(கு. வி. ம)

## இறுதி முடிவு செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்
தமிழ் காங்கிரஸ் அபேட்சகர்கள் பற்றிய இறுதிமுடிவு இன்னும் செய்யப்படவில்லையென தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் நியமனக்குழு உறுப்பினர்களில் ஒருவரான திரு ஆர் என் சிவப்பிரகாசம் நேற்றுதெரிவித்தார்.

இம் மாதம் 18ம் தேதி மாலை நடைபெறும், நியமனக்குழு கூட்டத்தில்தான் அபேட்சகர்கள் பற்றிய இறுதிமுடிவு எடுக்கப்படவிருப்பதாகவும், இக் கூட்டம் திரு ஜி ஜி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறுமென்றும் அவர் கூறினர்

வடக்கு மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலும் அபேடசகர்களை நிறுத்த விருப்பதாகவும் கிழக்கு மாகாணத்தில் சில தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை, உடுவில், வட்டுக்கோட்டை, நல்லூர் ஆகிய தொகுதிகளில் இரண்டுக்கு மேற்பட்டவர்கள் அபேட்சகர்களாக நிற்பதற்கு விண்ணப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### ஸ்ரேடியத்தில் இன்று

## பொலிஸ் அணிவகுப்பு வீதி விபத்து பற்றிய விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்
உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (வடபிராந்தியம்) திரு. எம். பி. டெடிகம ஓய்வுபெறுவதை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணம் பொலிசாரின் அணிவகுப்பு மரியாதை ஒன்று நடைபெறவிருக்கிறது.

ஸ்ரேடியம் மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கும் அணிவகுப்பில், பொலிஸ் நாய்களின் சாகஸங்கள், இராணுவப் படையினரின் வாத்திய இசை, பொலிசாரின் 'கடேற்', வீதிவிபத்துக்களை தடுப்பதற்கான வழிவகைகள் பற்றிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## 'கூட்டுறவினுல்தான் சமூக மறுமலர்ச்சி ஏற்படும்'

### யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் பெண்மணி

யாழ்ப்பாணம்,செவ்.
கூட்டுறவு இயக்கம் மக்களிடையே பரவ வேண்டுமென்பதற்காகத் தமது வாழ்நாளையே அர்ப்பணித்தவர் பிரிட்டிஷ் கூட்டுறவுத் தந்தையென அழைக்கப்படும் காலஞ்சென்ற ரொபேர்ட் ஒவன். அவரது

ரொபேர்ட் ஒவன் என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு இ இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடபகுதிக் கூட்டுறவாளர் பலர்

## கல்லூரி அதிபர்களுக்கு பொலிஸ் அதிபர் சுற்றறிக்கை

### மாணவர்களை அனுப்பும்படி கோரிக்கை

## இலங்கையிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சனை செய்தும் வழிபட்டனர்.

வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்று ஆரம்பமானது ஆலய சுற்றாடலில் இருபத்தி ஐந்து பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆலயத்தினுள் சென்று எவரும் பொங்கலேப்படைக்கவில்லை உள்ளே படைக்க வேண்டாமென ஆலயவாசலில் அறிவித்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. கேணியிலிருந்து நீரிறைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. குளாய் மூலம் பெறப்பட்ட தண்ணீரையே பெற்று சகலருல் பொங்கல் பொங்கினர்.

3 குருமார்கள் ஆலயத்தினுள் கடமையாற்றினர் ஆலயத்துள் செல்ல தடையெதுவும் இருக்கவில்லை வழக்கமாக வருடாவருடம் அடிக்கப்படும் பறை நேற்றைய உற்சவத்தில் இடம் பெறவில்லை. நந்திக்கு அப்பால் செல்லாமல் ஆலயத்துள் சகலரும்வழிபட்டனர்

வழிபட்டனர்

தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கத்தலைவர் திரு நாகரத்தினம் தலைமையில் இன்று ஹரிஜனர் பலர் ஆலயத்துள் சென்று வழிபட்டதாக அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

## மறுமொழி அணைகக அவகாசம்

ஆலயக்கதவுகளை ஏனைய பரிபாலகர்களின் அனுமதி பெருமல் திறந்து விட்டது தவறுஎன்றும்ஆலயம் பூட்டப்படவேண்டும் என்றும் கோரி முன்னாள் மனேஜர் குழந்தைவேலுவினல் தாக்கல் செய்யப்பட மனு மீதான விசாரணை இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு விக்னராசாவினல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது தற்போதைய மனேஜர் திரு. சி. சிவகுருவும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

ஆலயக் கதவுகளைப் பூட்டும்படி கோர்ட்டார் உத்தரவிட்டதாகவும் அதை மீறி ஆலயக் கதவுகளைத் திறந்துவிட்டு கோர்ட்டை அவமதித்ததாகவும் இது பற்றி நீதிமன்றம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு ஸி சுந்தரலிங்கம் கேட்டார் இதை நீதிபதி நிராகரித்து அதற்கான மனுவை உரிய முறையில் தாக்கல் செய்யும்படி கூறினர்.

அடுத்தமாதம்11ந் திகதி மறுமொழி அணைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்கறிஞர் திரு எஸ். நாகராசா திரு பாலகிருஷ்ணனின் அனுசரணையுடன் திரு சிவகுரு சார்பில் ஆஜராஞர்.

# ‘ஈழநாடு’

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் ‘பாலைதீவு விபத்து நிவாரணநிதி’, ‘ஈழநாடு’ **யாழ்ப்பாணம்**என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிருேம்.

### உதவி வழங்கியோர்:

நேற்றுவரை சேர்ந்த தொகை ரூபா 4,509-91
அ. நாகலிங்கம், இளைப்பாறிய தபால் அதிகாரி, பொற்பதிருேட், கொக்குவில். ரூபா 25-00
கனகரத்தின மகாவித்தியாலயம்- யாழ்ப்பாணம். ரூபா 54-73
ஏ. சங்கரான், சுபாஸ் கபே யாழ்ப்பாணம் (காசோலை) 101-00

## “மகாவலி திட்டத்துக்கு முன் சிறிய குளங்களை முதலில் திருத்துவது நல்லது”

—முன்னுள் பிரதம நீதியரசர்

காலி, திங்கள்

‘அரசாங்கம் உணவுற்பத்தியைப் பெருக்க விரும்பினல் மகாவலி கங்கையை திசை திருப்புவதிலும் பார்க்க சிறிய குளங்களை முதலில் திருத்துவது நல்லது’’ என்று முன்னுள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயக்கா கூறினர்.

காலியிலுள்ளமடவலமுல்ல பாடசாலைபரிசளிப்பு வைபவத்தில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்ஞர்.

திரு. பஸநாயக்கா தொடர்ந்து பேசுகையில், அரசின் உணவு உற்பத்தித் திட்டம் தோல்வி அடைந்து விட்டது. மக்கள் அரிசிக்குப் பதில் மாவைச் சாப்பிடுகிருர்கள். கட்சி மாறுவது ஜனநாயகத்துக்கு விரோதமானதல்ல. ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒரே கட்சிக்கே மக்கள் வாக்களித்துக் கொண்டிருக்கவில்லை’ என்று சொன்ஞர்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா டபிள்யூ ரி. ஒபயசேகரா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 14.ம் திருவிழாவான இன்று மாலை 6—7-30 மணிவரை திரு வி. நல்லையாவினல் ‘‘திருவடி திட்சை’’ என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும் இரவு 8-30—9-30 மணிவரை சத்தியபாலதேவி நவரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

## 18ம் திகதி ஆரம்பமாகும்

கோட்டை, திங்கள்

பல்கலைக்கழக நிர்வாக சபைவெள்ளிக்கிழமையன்று கூடிய பொழுது வித்தியோதயா பல்கலைக்கழகம் மார்ச் மாதம் 18ம் திகதி திறக்க முடிவு செய்துள்ளது.

மேற்படி பல்கலைக்கழக மாணவர் குழப்பத்தைத் தொடர்ந்து பெப்ரவரி 5ம் திகதி பல்கலைக்கழகம் மூடப்பட்டது யாவரும் அறிந்ததே.

......

## வெகுஜன இயக்க வேண்டுகோள்

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடி - கரவெட்டிப் பகுதியில் உள்ள தேநீர்க் கடைகளிலும் பொதுஇடங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்களைப் பாகுபாடுகாட்டாது சமத்துவமாக அனுமதிக்கும்படி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க வடமராட்சிக்கிளை நெல்லியடிப் பகுதியிலுள்ள தேநீர் கடைச் சொந்தக்காரரையும், பொதுஸ்தாபனங்களையும் துண்டுப்பிரசுரம் மூலம் கேட்டுள்ளது.

இவ்வியக்கத்திற்கு முற்போக்கு வாலிபருக்கும் நல்லெண்ணம் படைத்த பெரியோரும் ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் இவ்வியக்கத்தினர் கோரியுள்ளனர்.

# கல்லூரி அதிபர்களுக்கு பொலிஸ் அதிபர் சுற்றறிக்கை

## மாணவர்களை அனுப்பும்படி கோரிக்கை

மாகாண பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் இது சம்பந்தமாக சகல பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். வீதிவிபத்து தடுப்பதுபற்றி பொலிசார் செய்துகாட்டும் நிகழ்ச்சிகளில் மாணவர்களைப் பங்கு கொள்ளச்செய்யுமாறு அவர் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. சுந்தரலிங்கம் அனுப்பி வைத்துள்ள அறிக்கை வருமாறு:-

1969-ம் ஆண்டு வீதிவிபத்துக்களில் 612 பேர் இலங்கையில் கொல்லப்பட்டிருக்கின்றனர். 7749 பேர் படுகாயப்படுத்தபட்டிருக்கின்றனர் வீறுநடை போட்டு முன்னேறிவரும் விபத்துக்கள் சிறிதேனும் குறைவதாகக் காணப்படவில்லை. இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் இந்த ஆபத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும். வீதியில் போகும் போதுதன்னைப்பற்றியும் மற்றவரைப்பற்றியும் கவனமாக இருப்பதே விபத்திலிருந்து தப்புவதற்கு முதற்கண் தேவையாகும்.

வளர்ந்து வரும் வீதிவிபத்துக்கள் பொலிசாருக்குப் பெரும் பாரமாக இருக்கின்றது எல்லாவித வீதிப்பாவனையாளர்களுக்கும் பொலிசார் அளித்த போதனைகள் எவ்வித பலனையும் அளிக்கவில்லை. மோட்டார் சாரதிகளும் வீதியால் நடந்து செல்வோரும் வீதி ஒழுங்குகளை மீறி நடப்பதே பெரும்பான்மையான வீதி விபத்துக்களுக்கு அடிப்படைக் காரணமாகும். பாடசாலைப் பிள்ளைகளின் பாதுகாப்பே பொலிசாரை மிகவும் ஈர்ப்பதனல், யாழ்ப்பாணம் வீதி ஒழுங்குப் பகுதியைச் சேர்ந்த பொலிசார் யாழ். விளையாட்டு அரங்கில் நடாத்தவிருக்கும் வீதி ஒழுங்கு முறைகளைப் பற்றிய விதிகளை மாணவர்கள்கண்டு கொள்ள வேண்டும்.

பாடசாலை அதிபர்கள் தமது மாணவ மாணவிகள் யாவரையும் இந்த வீதி ஒழுங்கு முறைகளைப் பற்றிய விதிகளை பொலிசார் செய்துகாட்டுவை நேரில் பார்வையிடுவதற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். இது பாடசாலைப் பிள்ளைகளுக்கு வருங்காலத்தில் மிகவும் உபயோகமானதாக விருக்கும்.

# லெபனுன் எல்லையில் இஸ்ரேல் தாக்குதல்

## 5 பேர் பலி; 14 பேர் காயம்

கெய்ரோ, மார்ச் 16

சூயஸ்கால்வாய்க்கு வடக்கே யுத்த நிறுத்தப்பகுதியில் இஸ்ரேலிய துருப்புக்களுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுப்படைகளுக்குமிடையே நேற்றுச் சில மணி நேரம் கடும் சண்டை நடந்ததாகவும் ஆனல் சேதம் அதிகமில்லையென்றும் ஐக்கிய அரபுக்குடியரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிரியா இஸ்ரேல் எல்லையிலும் இஸ்ரேலிய போர் விமானங்கள் போர் நிறுத்த எல்லையை மீறித் தாக்குதல் நடத்தியதாகவும் சிரியாத் தலைநகரான டமாஸ்கஸுக்கு வெகு சமீபத்தில் சென்று தாக்குதல் நடத்தியதாகவும் அதிகசேதம் ஏற்படுவதற்குமுன் அந்த விமானங்கள் விரட்டியடிக்கப்பட்டு விட்டதாகவும் சிரியா அதிகாரிகள் கூறினர்.

லெபனுன் எல்லையில் இஸ்ரேலியர் நடத்திய தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர். 14பேர் காயமடைந்தனர்.

பாகிஸ்தானுக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜோர்டான் மன்னர் ஹுசையினுக்கு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் இரவு விருந்துபசாரமளித்துக் கௌரவித்தார்.

— —

## ‘சிவ சிந்தனை’

புங்குடுதீவு, திங்கள்

புங்குடுதீவு சிவன் கோவில் வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை அனலையம்பதி சு. சோமசுந்தரக்குருக்களின் ‘சிவசிந்தனை’ என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கம் இடம்பெற்றது.

விடையே பரவ வேண்டுமென்பதற்காகத் தமது வாழ்நாளையே அர்ப்பணித்தவர் பிரிட்டிஷ் கூட்டுறவுத் தந்தையென அழைக்கப்படும் காலஞ்சென்ற ருெபேர்ட் ஓவன். அவரது இலட்சியம் வீண் போகவில்லை. இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் சிறப்புற விளங்கி வருவதையறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு திரு ஓவனின் பேர்த்தியும் பிரபல கூட்டுறவாளருமான திருமதி கரோலின்டேல் ஓவன் எஸ். பால்ட்வின் நேற்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு இ இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வடபகுதிக் கூட்டுறவாளர் பலர் கலந்துகொண்டனர்.

திருமதிகரோலின் மேலும் குறிப்பிட்டதாவது:

நாட்டின் நிலைக்களன் கூட்டுறவே கூட்டுறவு இயக்க மூலம் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தமுடியும்.

கூட்டுறவு இயக்கத்துக்கு திரு. ருெபேர்ட் ஓவன் செய்த பணிகளையும் சாதனைகளையும் அதன் வளர்ச்சிக்கு செய்த சேவைகளையும் திருமதி கரோலின் எடுத்துக் கூறிஞர்.

டவர்கள் அபேட்சகர்களாக நிற்பதற்கு விண்ணப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

## இலங்கையிடம் மலேஷியா தோற்றது

கோலாலம்பூர், மார்ச் 1

மலேஷியாவை இலங்கை நேற்று தோற்கடித்தது. ‘டேவிஸ்’ வெற்றிக் கிண்ணத்துக்காக இங்கு நடந்த ‘டெனிஸ்’ போட்டியிலேயே இலங்கை வெற்றி வாகை சூடியது. இலங்கை 3—0 ஆட்டங்களால் வெற்றியைத் தனக்காக்கிக் கொண்டது.

## வடமராட்சியில் கதம்பவிழா

இமையாணன், திங்கள்

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் வடமராட்சிப் பாடசாலைகள் கலந்து கொள்ளும் ஓர் கதம்ப விழா இம்மாதம் 20-ம் திகதி வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

— —

நல்லூர்

## பொலிஸ் நிலையம் இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூரில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பொலிஸ் நிலையம்இன்றுகாலைதிறந்துவைக்கப்படும். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் (வடபிராந்தியம்) திரு. எம். பி. டெடிகம நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள ‘‘பொலிஸ் காட்றூமை’’ திறந்துவைப்பார்.

— —

## தொகுதியை எம். பி. கவனிக்காவிட்டால்...

அல்லைப்பிட்டி, திங்கள்

‘‘ஒரு பெரியகட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தனது தொகுதியிலுள்ள குறைகளைக்கவனிக்காது விட்டால் அவற்றை மேற்படி கட்சியின் தலைமைப்பீடத்திற்கு எடுத்துக் கூறவேண்டும்’’ என ஊர்காவற்றுறை நெலிஞ்சிமுலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கிளிநொச்சிஎம். பி. பண்டிதர் கா பொ இரத்தினம் தெரிவித்தார். பி யோன்பிள்ளை தலைமையில் இருதயராசா சனசமூக நிலையமண்டபத்தில்கூட்டம் நடைபெற்றது.

# பஸ் - ரயில் மோதல்

## ஒருவர் பலி; 12 பேர் காயம்

கோட்டை, திங்கள்

கொழும்பை நோக்கிவேகமாக வந்து கொண்டிருந்த ரயிலுடன் இ.போ.ச. பஸ் ஒன்று பயங்கரமாக மோதியது. இக்கோர விபத்தில் ஒரு பெண்கொல்லப்பட்டதுடன் 12 பிரயாணிகள் படுகாயம் அடைந்தனர்.

குடுவிற்ற வட்டாரத்தில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றில்இப்பயங்கர விபத்து நேற்று முன்தினம் நடைபெற்றது. பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த விதானகே லூசியா என்ற பெண் வெளியே பிணமாக எடுக்கப்பட்டார். மற்றும் பன்னிரண்டு பஸ் பிரயாணிகள் பலத்த காயங்களுடன் இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவ்விபத்தினல்பிரஸ்தாப ரயில் பாதையில்ரயில்சேவை நீண்ட நேரம் ஸ்தம்பித்தது. பஸ்சாரதி பொலிஸாரின் புலன் விசாரணைக்காக தடுப்புககாவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## சகோதரர்கள் குற்றவாளி தீர்ப்பு ஒத்திவைப்பு

காலி, திங்கள்

கொலைக் குற்றஞ்சாட்டப்பட்ட இரு சகோதரர்களைக் குற்றவாளியாக்கண்ட காலி அசைஸ் நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெஸ்டர், தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார். கொலை திட்டமிட்டு செய்யப்படவில்லையென்றும்கைமோசக்கொலை என்றும் நீதியரசர் தெரிவித்தார்

1968ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ம் திகதி மாத்தறை காளியதாசா ரோடைச் சேர்ந்த எம். கே. சிறிசேனு என்பவரைக் கொலை செய்ததாக சகோதரர்களான கே கே ஏ பிரேமரத்தின, அமரதாசா ஆகிய இருவர் மீது சொலைக்குற்றம்சாட்டி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதியரசர் இவ்விரு எதிரிகளினதும் நன்னடத்தை அறிக்கைக்கு உத்தரவிட்டார்


## அடைவு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி யாழ். கிளையில் (பிரதான வீதி) 1-11-1968-க்கு முன்பு அடைவுவைத்து மீட்கப்படாது இருக்கும் நகைகள் 4-4-1970 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

முகாமையாளர்
யாழ். கூட்டுறவு மாகாண வங்கி, யாழ். கிளை 1995


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பக்கம் வெற்றி

## சென். ஜோன்ஸுக்கா சென்றலுக்கா?

யாழ். மத்தியக் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 72 வது கிரிக்கெட் போட்டியையொட்டி கிரிக்கெட் பிரியர்களுக்கு உற்சாகமளிக்கும் புதிர் போட்டியொன்றை ஈழநாடு 'றுப்பி' விளம்பரதாரரின் ஆதரவுடன் நடத்துகிறது. புதிர்போட்டி இதோ!

இப்போட்டிசம்பந்தமான நிபந்தனைகள்:

○ ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.

○ எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக்கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல்பரிசு வழங்கப்படும். மற்றும் நான்கு பரிசுகளும் வழங்கப்படும்.

○ கூப்பன்களை 'ஈழநாடு கிரிக்கெட் புதிர்', 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம் அல்லது 'ஈழநாடு கிரிக்கெட் புதிர்', 'றுப்பி விளம்பரதாரர்', 18, வேம்படி றேட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

○ புதிய போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

○ கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

○ புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டியகடைசிக் காலம்: 20-3-70 காலை 10 மணிக்குமுன்னர்.

○ உங்கள் விடைகளை அழகாக தெளிவாக எழுத வேண்டும்.

**'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்**

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

..................................................

..................................................

..................................
கையொப்பம்

### புதிருக்கான கேள்விகள்

1. இக்கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு பூவா, தலையா போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?
2. இந்தக்கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதிவெற்றி கிடைக்கும்?
3. யார் கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?
4. கூடுதலான விக்கெட்டுகளை 'பேஸ்மென்' களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?
5. முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை யார் எடுப்பார்கள்?
6. யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?
7. சென் ஜோன்ஸ் காப்டனு, சென்றல் காப்டனு கூடுதலான ரன்களை எடுப்பார்?
8. முதலாவது இன்னிங்ஸில் எந்தக்கோஷ்டி கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?

### பரிசுகள் வழங்குபவர்கள்

1-ம் பரிசு: ஏ. கே. எஸ். வழங்கும் மணிக்கூடு.

2-ம் பரிசு: ஒட்டஸ்வழங்குகிருர்கள் (நாளை பரிசு விபரம்)

3-ம் பரிசு: அமிர்தாஸ் வழங்கும் மணிப்புரி சாரி அல்லது டெர்லின் ஷேர்ட்.

4-ம் பரிசு: ஆர் பி கோ தயாரிப்புகளின் பிரதம விநியோகஸ்தர் பாலா டிஸ்றிபியூட்டர்ஸ் யாழ்ப்பாணம், வழங்கும்-2 போம்தலையணைகள்.

5-ம் பரிசு. மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கும்பரிசுப் பொட்டலம்.

---


## வரிவிளம்பரம்

**தேவை**

அராலி விக்னேஸ்வர ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு மனேஜர் தேவை. ஜீ. சி. ஈ பரீட்சையில் சித்தியும் கூட்டுறவுப் பயிற்சியுமுள்ளவர் விண்ணப்பிக்கவும். காசுப்பிணை 1000/- ஆதனப்பிணை 2000/-, சம்பளம் முந்திய அனுபவத்திற்கிணங்க 100/- ரூபாவுக்கும் 120/-க்கும் இடையில் எல்லாப் படியுமுட்பட நிர்ணயிக்கப்படும். வயது 25 க்கும் 35 க்கும் இடைப்பட்டதாயிருத்தல் வேண்டும். முடிவு திகதி 25-3-70 செயலாளர், அராலி கிழக்கு. 1923


## பருத்தித்துறை வட்டாரம்

### மெய்வல்லுநர் போட்டிமுடிவு

வல்வெட்டித்துறை, திங்கள்

பருத்தித்துறை வட்டார பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு: க. நவரத்தினம் தலைமையில் ஹாட்லிக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. வெற்றி பெற்ற பாடசாலைக்கு உடற்பயிற்சி வித்தியாதிகாரி திருமதி குகதாசன் தகுதிப் பத்திரங்கள் வழங்கினுர்

வெற்றி பெற்ற பாடசாலை விபரம் வருமாறு:- கீழ்ப்பிரிவு 'ஏ' ஆண்கள்:- ஹாட்லிக்கல்லூரி, கீழ்ப்பிரிவு 'ஏ' பெண்கள்:-பருத்தித்துறை மெ. மி. பெண்கள் கல்லூரி, மத்தியபிரிவு 'ஏ' ஆண்கள்:-வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மேற்பிரிவு 'ஏ' பெண்கள்:- பருத்தித்தித்துறை மெ மி: பெண்கள் கல்லூரி, கீழ்ப்பிரிவு 'பி' ஆண்கள் அல்வாய் சிறீலங்கா, தும்பளை சைவவித்தியாசாலை, கீழ்ப்பிரிவு 'பி' பெண்கள் பருத்தித்துறை சென் தோமஸ் பாடசாலை, வல்வெட்டித்துறை றே. க. பாடசாலை.


வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி யாழ்ப்பாணம்

செல்வி. மேரி பாக்கர் அவர்களின் பிரிவுபசார வைபவம்

மார்ச் மாதம் 20-ம் திகதி பிற்பகல் 3-30 மணியளவில், வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியில் மேற்படி வைபவம்நடைபெறும். பழையமாணவிகள்அனைவரையும் அத்தருணம் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

திருமதி. சிறீகாந்தா, கௌரவ. காரியதரிசி.

1991


## திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், செவ்வாஷையூர் பிரசவவிடுதியை இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாண எம். பி. திரு ஜி ஜி பொன்னம்பலம் திறந்துவைப்பார். இவ்வைபவத்தில் ராஜாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

---

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் காந்திக்கிராமத்தில் தையல் பயிற்சி நிலையம் நிறுவப்படவிருக்கிறது நூல் நிலையம், தையல் நிலையம், வாசிகசாலை சிரமதான வேலைத்திட்டங்கள் அமைத்தல், புதிய வீதி வேலைகள் போன்ற திட்டங்களை நிறைவேற்ற காந்திக் கிராமசபையினர் முன்வந்துள்ளனர்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்] ஹெலன் குமாரி, மஞ்சுளா நடித்த

**மஞ்சள் குங்குமம்**

ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் - தங்கவேலு நடித்த


## இன்றைய பலன்

பங்குனி மாதம் 4-ம் திகதி [17-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- திருப்திகரமானமாற்றங்களுக்கு இடமுண்டு. நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவார்கள். திறமையான நடவடிக்கைகளின் மூலம் பணத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

**ரிஷபம்**- வசதியாக வாழ்க்கை நடக்கும். எதிர்த்தவர்களே இன்று உங்கள் ஆதரவை நாடிவருவார்கள். குடும்பவாழ்க்கையில் அமைதி நிலவும். புதிய ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படலாம்.

**மிதுனம்**- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம். தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

**கடகம்**- நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும். பிணி அகலும் உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர், சிறப்புண்டு.

**சிம்மம்**- இல்லத்தில் இனிமையவுன நிகழ்ச்சிகள் இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானியவிருத்திக்கும் இடமுண்டு.

**கன்னி**- குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். ஆத்திரஉணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும். அமைதியுடன் இருக்கவும்.

**துலாம்**- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதை கருவவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவழிநாட்டமுண்டு.

**விருட்சிகம்**- இதயக்கமலம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும். [illegible]மையில் புதிய

## 'நேர்மை, கண்ணியமுள்ளவர்களை தெரிவு செய்யவேண்டும்'

— எஸ். ஜே. வி.

உடுப்பிட்டி, திங்கள்

'தமிழ்மக்கள் சகல தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களைத் தெரிவு செய்து ஆட்சிமன்றம் அனுப்புவதின் மூலமே விமோசனம்பெறலாம்.'

இவ்வாறு பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் வல்வெட்டியில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணிக்கிளை அங்குரார்ப்பண விழாவில் பேசுகையில் கூறினர்.

தமிழரசுத்தலைவரும், காங்கேசன்துறை எம். பி யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வாலிப முன்னணிக்கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில், தமிழினத்தைத் தவறுன பாதைகளில் இழுத்துச் செல்லும் அரசியல் வாதிகளை ஒதுக்கிவிட்டு நேர்மையும், கண்ணியமும் வாய்ந்தவர்களையே மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு. க. ஜெயக்கொடி பேசும்பொழுது, "வாலிபர்கள் தான் எதிர்காலத்தை[illegible]

1972

## ஒலிம்பிக்குக்கு இப்பொழுதே ஜெமனி தயார்

பேர்லின், மார்ச்.16

1972-ம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் நடைபெறவிருக்கின்றன. மூனிச்நகரில் போட்டி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக இப்பொழுதிருந்தே நடைபெற்றுவருகின்றன.

இதற்காக விளையாட்டுத்திடல், சாலைகள், விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கான விடுதிகள் ஆகியவை உருவாகிவருகின்றன. 100 நாடுகளிலிருந்து சுமார் 3000 விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் விளையாட்டில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் 2 ஆண்டுகளில் மேடு பள்ளமாக இப்போது காட்சியளிக்கும் ஓபர் விசன் [illegible]ல்ட்' ஒலிம்பிக் விளையாட்டு

## முருகப்பெருமான் நூல் வெளியீடு

சுழிபுரம், திங்கள்

பண்ணுகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட 'விசவத்தனை முருகப் பெருமான்' நூல் வெளியீட்டு விழா வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முதலியார் செ. சின்னத்தம்பி நூலை வெளியிட்டு வைத்துப்பேசினுர். மற்றும் பலர் ஆய்வுரை நிகழ்த்தினர். பண்டிதர் அ ஆறுமுகத்தினுல் எழுதப்பட்ட இந்தநூலின் முதற்பிரதியை தொல்புரத்தைச் சேர்ந்த வர்த்தகர் திரு. து. இராசரத்தினம் பெற்றுக்கொண்டார்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## போலாந்துக்கு 12,000 தொன் றப்பர்

கோட்டை, திங்கள்

இலங்கையிலிருந்து 12,000 தொன் றப்பரை வாங்குவதற்கு போலாந்து சம்மதித்துள்ளது.

சீனுவுக்கடுத்ததாக பெருந்தொகை றப்பரை இலங்கையில் இருந்து பெறும் சோஷலிசநாடுபோலாந்தாகும், சிங்கப்பூர் கொடுக்கும் விலையிலும் பார்க்க கூடிய விலை கொடுத்து போலாந்து வாங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதம் 18-ம்திகதி இந்த வியாபார ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

## முனிசிபல் சபை அந்தஸ்து வேண்டும்

மாத்தறை, திங்கள்

மாத்தறை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையின் அந்தஸ்தை முனிசிபல் சபை அந்தஸ்துக்கு உயர்த்துமாறு அரசாங்கத்தைக் கோருவதென ஏகமனதாகத் தீர்மானிககப்பட்டது

இக்கூட்டத்திற்குச்சபைத் தலைவர் திரு. எஸ். கே. பியதாஸா தலைமைவகித்தார். பட்டினசபை எல்லைக்குள் உள்ள வீதிகளின் பெயரை மாற்றுவது சம்பந்தமானதொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. ......

## வெப்ப நிலை அதிகரிக்கிறது

அம்பாறை. திங்கள்

கடந்த சில நாட்களாக அம்பாறைப்பகுதியில் வெப்பம் அதிகரித்துள்ளதால் தொழில் புரிபவர்கள் பகல் வேளையில் வேலைசெய்ய இயலாது கஷ்டப்படுகிறுர்கள். வெப்பநிலை 96,97,98பாகையாகக் கூடிக் கொண்டே போகிறது.

---

அரியாலை திங்கள்

இன்று அரியாலை சிவன் கோவில் 6-ம் திருவிழா விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கிறது. இவ்விழாவில் விசேஷ மேளக்கச்சேரிகளும் தமிழிசை மணி திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரனின் திருமுறை பண்ணிசையும் இடம் பெறும்.

## எதிரிகள் குற்றவாளிகள்; தீர்ப்பு 21-ம் தேதி வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

மஞ்சள் குங்குமம்


ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
பந்தயம்
பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 ம ணிக்கு
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்



ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானா மோகனாம்பாள்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்


யுடன் இருக்கவும்.

**துலாம்**- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதை கருவவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் ஏற்படும். அறவழிநாட்டமுண்டு.

**விருட்சிகம்**- இதயக்கமலம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும். ...மையில் புதிய ஆர்வம் பிறக்கும். கற்றதனால் பயனும் கிடைக்கும்.

**தனுசு**- எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் பதட்டநிலை தென்படும்' இறைநம்பிக்கையும் எதையும் தாங்கும் இதயமும் வேண்டும்.

**மகரம்**- புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். குடும்பவாழ்க்கை கற்கண்டுபோல் இனிக்கும்.

**கும்பம்**: முயற்சிகளில் சிக்கல்கள் தோன்றும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். தொழில்துறைகளிலும் தலைமறைவு நடவடிக்கைகளும் உருவாகலாம். மேலதிகாரிகளின் கட்டளைக்கு பணிந்துநடக்கவும்,

**மீனம்**- இரக்கசிந்தை மேலோங்கும். பிறருக்கு உதவுவதில் பெருமகிழ்ச்சியடைவீர்கள். முன்னாள் ஆசிரியர் ஒருவரின் சிபார்சுக்கடித்தம் நல்ல பலனை அளிக்க முடியும். பொதுவாக தரமான தினம்.

# வலைத்திருட்டில் இந்தியர்?
## நடவடிக்கை எடுக்கும்படி மயிலிட்டி மீனவர் சங்கம் மகஜர்

மாவிட்டபுரம் திங்கள்

கடலில் நடைபெற்று வரும் வலைத் திருட்டைத்தடுப்பதற்கு இலங்கைஇந்திய அதிகாரிகள் மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்றும் திருட்டில் ஈடுபடும் மீனவரைக் கண்டுபிடிப்பதுடன் இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையே ஏற்படும் தகராறைத் தடுப்பதற்கு நடவடிக்கைஎடுக்கும்படியும் கைத்தொழில் மீன்பிடி அமைச்சரை மயிலிட்டி சென்மேரீஸ் மீன்பிடி சங்கம் கேட்டுள்ளது.

மயிலிட்டி சென் மேரீஸ் மீன்பிடிச் சங்கத்தலைவர் திரு ச லோறன்ஸ் மீன்பிடி அமைச்சர் திரு பிலிப்குணவர்த்தனுவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மீன்பிடி வலைகள் களவு அதிகரிப்பதுபற்றி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலங்களில் சுமார் 1 லட்சத்து35 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான வலைகள் களவாடப்பட்டுள்ளதாகவும் பேதுறுப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான 4 000 ரூபாவலையை இந்திய மீன்பிடியாளர் சில தினங்களுக்கு முன்னர் அறுத்துக் கொண்டிருந்ததாகவும் அதை நேரடியாகக் கண்ட இலங்கை மீனவர்கள் அவர்களைத் துரத்திச் சென்றபோது 1500 ரூபா பெறுமதியான வலைகளைப் பெறமுடிந்ததாகவும் அம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இன்று மட்டும்
MANOHARA
JAFFNA
4-45க்கு மாதர்களுக்குமட்டும்.
7 & 9-45 p.m
HELGA
The most revealing Sex education Film ever released!
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
பாஸ்கள்-சலுகைகள் ரத்து
Next Attraction
Reflection in a Golden Eye

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
நடித்த
அல்லி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
குலமகள் ராதை


யும், கண்ணியமும் வாய்ந்தவர்களையே மக்கள் தெரிவு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்.

திரு. க. ஜெயக்கொடி பேசும்பொழுது, "வாலிபர்கள் தான் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சக்திவாய்ந்தவர்கள் வாலிப முன்னணிகள் மூலம் இளைஞர்களை ஒரே அணியில் திரட்டி உரிமைப் போரில் ஈடுபடவைப்பதே எமது நோக்கம் நாம் தொடர்ந்தும் இரண்டாந் தரப்பிரஜைகளாக வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. முதல ம்தரப் பிரஜைகளாக வர ஒற்றுமையுடன் வாலிபர்கள் இயங்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், ஜனுப் மசூர் மௌலானு, திரு. ஆர். இராசையா, திரு. வீ. தருமகுலசிங்கம், திரு. சேனுதிராசா, திரு. ஆ. செல்லத்துரை ஆகியோரும் பேசினர்.

வாலிப முன்னணிக் கிளை நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. த. சின்னராசா, உபதலைவர்: திரு. சி. சுந்தரலிங்கம், காரியதரிசி: திரு, வே. தர்மகுலசிங்கம், இணைக்காரியதரிசி: திரு. ஆர். இராஜகோபால், தனுதிகாரி: திரு. வி. மகேசன்.

உரும்பராய்

## சாமபியன் கிண்ணம் பெற்றது

உரும்பராய், திங்கள்

வலி. கிழக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டப்போட்டியில் உரும்பராய் கணேசா விளையாட்டுக்கழகமும் கல்வியங்காடு ஞானபாஸ்கரன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி இறுதியில் உரும்பராய் கல்வியங்காடு கோஷ்டியை 3—0 என்ற நிலையில் கோல்போட்டு வலிகாமம் கிழக்கு உதைபந்தாட்ட சிறந்த கோஷ்டிக்கான சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

புத்தகலட்டி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகவிருந்தார்.


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-poya 4 Shows
Terry Thomas,
Louis Defunes
in
Don't Look Now
(We're being Shot at)


க் விளையாட்டில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் 2 ஆண்டுகளில் மேடு பள்ளமாக இப்போது காட்சியளிக்கும் ஓபர் விசன் ல்ட்' ஒலிம்பிக் விளையாட்டு நகரமாக உமாறிவிடுமென ஜெர்மனியிலிருந்து அறிவிக்கப்பட்டது.

## பிரித்தானிய கூட்டுறவாளர் நிகழ்ச்சி

மாவிட்டபுரம், செவ்.

3 நாள் கூட்டுறவுத்துறை சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளர் பிரித்தானிய பிரபல கூட்டுறவாளர் திருமதி ஒவன் தெல்லிப்பழை ஐக்கியவைத்தியசாலைக்கு இன்று விஜயம் செய்கிறார்.

பிரித்தானியதேசத்தின் கூட்டுறவுத்தந்தையென விளங்கும் றெபேட ஓவனின் பூட்டியான திருமதி கரோலின்டேன் ஒவன் எஸ். பால்டலின், இலங்கையில் கூட்டுறவுத்துறையின் முன்னேற்றங்களைப் பார்வையிடுவதற்காக இலங்கைவிஜயத்தைத்மேற்கொண்டார்,

இவர் இங்குதங்கிநிற்கும் நாட்களில் யாழ் மாவட்ட கூட்டுறவாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்.

பெறும்.

# எதிரிகள் குற்றவாளிகள்; தீர்ப்பு 21-ம் தேதி வழங்கப்படும்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

'நில்லடா என்று சொல்லிக்கொண்டு முதலாம் எதிரி ஓடிவந்து எனது கழுத்தில் ஒரு வெட்டு வெட்டினர். 2-ம் எதிரி காலில் கோடரியால் வெட்டினர். உடனே நான் நிலத்தில் விழுந்துவிட்டேன். விழுந்த என்னை எதிரிகள் இருவரும் சேர்ந்து தூக்கிக்கொண்டு 2-ம் எதிரியின் வீட்டுப் பக்கம் கொண்டு சென்றனர். அதன் பின்னர் நான் மயங்கிவிட்டேன்.'

அல்வாய் தெற்கு வட்டுவத்தையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஆறுமுகம் என்பவர்பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு அல்வாய்தெற்கைச் சேர்ந்த க. நடராசா, வ. இராசரத்தினம் ஆகிய இருவரும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 2-ந் திகதி அதே இடத்தைச்சேர்ந்த க ஆறுமுகத்திற்கு வெட்டி படுகாயம் விளைவித்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

ஆறுமுகம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில், எதிரிகள் எனது சொந்தக்காரர். சம்பவதினம் காலை தோட்டத்திற்குப் போனேன் பின்னர் பிற்பகல் 2-30மணியளவில் வீட்டிற்கு திரும்பிவந்தேன் எனது வீட்டுக்குப் பக்கத்தில்தான் 2வது எதிரியின் வீடு இருக்கிறது. திரும்பி வீட்டிற்குவந்துகொண்டிருக்கும்போது 1ம் எதிரி 'நில்லடா' என்று சொல்லிக்கொண்டு ஓடிவந்து கழுத்தில் கத்தியால் வெட்டினர் 2வது எதிரி கோடாரியால் காலில் வெட்டிவிட்டு இருவருமாக என்னைத் தூக்கிக்கொண்டு 2வது எதிரியின் வீட்டுப்பக்கமாகக் கொண்டு சென்றனர். அதன்பின் எனக்கு மயக்கம்வந்துவிட்டது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைத்துதான் மயக்கம் தெளிந்தது. பொலிசுக்கு முறைப்பாடு கொடுத்தேன்.


ஆ. சோமாவதி சார்ஜண்ட் திரு பி. நவரத்தினம் 1ம் எதிரி க. நடராசா ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் எதிரிகளைக் குற்றவாளியாகக்கண்டு றிமாண்டில்வைக்க உத்தரவிட்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 21ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள்
செலுத்தும் பரிபூரண அஞ்சலி
ஏ. எவ். ரேமண்ட்ஸ்
ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.
147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாண்ட வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.

ஏ எவ் ரேமண்ட்ஸ்



0231


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க யோசனையை ரஷ்யா நிராகரித்தது

மாஸ்கோ, மார்ச், 16

லாவோஸ் பிரச்னைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு சர்வதேச ரீதியில் ஆலோசனைசெய்யலாமென அமெரிக்கா தெரிவித்த யோசனையை சோவியத் யூனியன் நிராகரித்திருக்கிறது.

அமெரிக்க அதிபர் திரு நிக்ஸனுக்கு சோவியத் பிரதமர் திருகொஸிஜின் எழுதிய பதிலில் சர்வதேச ஆலோசனை நடைமுறையில் எதுவிதபயனையும் இன்றுள்ள நிலையில் அளிக்கமாட்டாது என்று தெரிவித்திருக்கிறார்.

இடதுசாரியினரான பதட் லாவோவினரை சோவியத் யூனியன் தொடர்ந்து ஆதரிப்பதாகவும் திரு. கொஸிஜின் தெரிவித்திருக்கிறாராம்.

# ஆயுதங்கள் கொண்டுசென்ற அமெரிக்கக் கப்பலில் கலகம்

நாம்பென், மார்ச்.16

அமெரிக்காவிலிருந்து ஆயுதங்களுடனும் வெடிமருந்துகளுடனும் தாய்லாந்துக்குச் சென்று கொண்டிருந்த கொலம்பியா ஈகிள் என்ற அமெரிக்கக்கப்பலில் கலகம் ஏற்பட்டதால் அந்தக்கப்பல் இப்போது கம்போடியாக் கடலில் நங்கூரமிடப்பட்டிருக்கிறது. இதை மற்றொரு அமெரிக்கக்கப்பல் காவல்புரிந்து கொண்டிருக்கிறது.

கொலம்பியா ஈகிள் என்ற கப்பலில் அதன் தலைவனின் உத்தரவுகளுக்குச் சில மாலுமிகள் கட்டுப்பட மறுத்து விட்டனர். இதனால் கலகம் வெடித்தது. 15 மாலுமிகள் காயமடைந்ததாகக் கூறப்பட்டது. கலகம் பற்றிய தகவல் கிடைத்த மற்றொரு அமெரிக்கக்கப்பல் விரைந்து சென்று கலகம்செய்த மாலுமிகளை அக்கப்பலிலிருந்து எடுத்துக்கொண்டது.

## சோவியத் தலைவர்களுடன் இளவரசர் சிகானுக் பேச்சு

நாம்பென், மார்ச்.16

கம்போடியாவில் தோன்றியுள்ள நிலைமைபற்றிவிரைவில் முத்தரப்புப்பேச்சுவார்த்தை ஆரம்பமாக விருக்கிறது. வியட் காங்கியர், வட வியட் நாமியர் ஆகியோருடன் கம்போடியஅரசாங்கப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்த விருக்கின்றனர்.

மாஸ்கோ சென்றுள்ள கம்போடிய அரசாங்கத்தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக் சோவியத்தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறார் கம்போடியாவின் நடுநிலைமையைத் தொடர்ந்து பாது காப்பதற்கு உதவி புரியும்படி அவர் சோவியத்தலைவர்களைக் கேட்டிருக்கிறார். இதே போன்றுசீனத்தலைவர்களையும் அவர் கேட்கவிருக்கிறார் எனவும் அவர் யேறும் படி தூண்டும் படி ரஷ்யத்தலைவர்களை திருசிகானுக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது

கம்போடியாவிலுள்ள வியட் காங், வட வியட்நாம் தூதராலயங்கள்மீது சென்ற புதன் கிழமை நடந்த தாக்குதல் சம்பந்தமாக சோவியத் அரசாங்கப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' அபிப்பிராயம் தெரிவிக்கையில் இது திட்டமிட்ட தாக்குதல் என்று தெரிவித்துள்ளது. வலது சாரியினரின் திட்டமிட்ட காடைத்தனம் என்று அதுவர்ணித்தது.

மாஸ்கோவந்துள்ள கம்போடியத்தலைவர் இளவரசர் சிகானுக்கு இன்று சீனத் தலைநகருக்குச் செல்ல விருந்தார் ஆயினும் அவர் தமது மாஸ்கோ விஜயத்தை மேலும் சிலதினங்களுக்கு

## தமிழர் தபால் தலை

சென்னை, மார்ச் 16

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் காஞ்சிபுரத்தை அடுத்த திருமெய்ப்பேடு கிராமத்தில் பிறந்தவரும் 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான தளவாய் அரியநாதமுதலியார் என்பவரின் படத்தைத்தபால் தலையில் வெளியிட இந்திய தபால் - தந்தி இலாகா ஆலோசித்து வருகின்றது

இவர் விஜயநகரத்தில் கணக்கர் பதவியையும் பின்பு அமைச்சர் பதவியையும் வகித்தவர். மதுரையில் நயக்கர் அரசை ஏற்படுத்தி மந்திரியாகவும் தளவாயாகவும் பணிபுரிந்துள்ளார்.

இவரது சந்ததியில் வந்தவர் ஒருவர் தபால்இலாகாவுக்கு இதுபற்றி எழுதிய போது தபால் இலாகா பரிசீலனைசெய்வதாக தெரிவித்துள்ளது.

## "இலங்கை - இந்தியர் பிரச்னையை சிறிமாவோ நீர்த்துவைத்தார்"

கண்டி, திங்கள்

காந்த பாலமண்டலய போன்ற மக்கள் நிறுவனங்கள் கூட்டணியின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்து விளக்கி திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்திரமான சோஷலிச அரசாங்கத்தை

## புதிய கிராம சேவையாளர்பிரிவு

மண்டைதீவு, திங்கள்

வேலணை மேற்கு புளியங்கூடல், சரவணை. சுருவில், நாரந்தனை, ஆகிவ பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு வேலணை மேற்கு சரவணை, சுருவில்எனமூன்று கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வேலணை 7ம், 8ம்,வட்டாரங்களும், 6ம் வட்டாரத்தின் ஒரு பகுதியும்,வேலணை மேற்கு கிராமசேவையாளர் பிரிவாகவும் வேலணைக் கிராமசபை 9ம் வட்டாரமும், நாரந்தனைக கிராம சபையின் 1ம், 2ம், வட்டாரங்களும் சரவணை கிராம சேவையாளர் பிரிவாகவும் நாரந்தனைக் கிராமசபையின் 3ம், 4ம், 5ம், வட்டாரங்கள்சுருவில் கிராமசேவையாளர் பகுதியாகவும் அமைந்துள்ளன.

புனரமைப்புச் செய்யப்பட்ட இக்கிராம சேவையாளர் பகுதிகள் இம் மாதம் முதல் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றன.

0 0 0

## இமையாணனில்

இமையாணன்திங்கள்

இமையாணன் பகுதியில் புதிய கிராம சேவையாளர் பிரிவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. முன்னர் கிளிநொச்சிப் பிரிவில் கிராம சேவையாளராகக் கடமையாற்றிய திரு. விஸ்வநாதன் புதிய இமையாணன் பிரிவில் கிராம சேவையாளராகப் பணியாற்றுவார்.

இதுவரை காலமாகஇமையாணன் பகுதி மக்களின் காரியங்கள் மிகப்பெரிய பிரிவான சரணவாய் வடக்குக்கிராம சேவையாளரின் கீழ் நடைபெற்று வந்தன. சரண[illegible]ய் வடக்குப் பிரிவில் அதிக மக்கள்இருப்பதனாலும், இமையாணன்பகுதி மக்கள் நீண்ட தூரம்சென்று கஷ்டப்பட்டு காரியங்களைக் கவனிக்க வேண்டியதினாலும் இப்பு[illegible] பிரிவு நீண்டகால

### யாழ்ப்பாணத்தில்

## செக். நாட்டு தூதுவர்

யாழ்ப்பாணம், திங்கள்

செக். தூதுவர் திரு. பவல்போல் ,தமது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார். கலாசார அதிகாரி திரு. கொலின்ஸ்கீ சகிதம் இங்கு வந்துள்ள இவர் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை, சைவ ஆலயங்கள் ஆகிய இடங்களுக்கு சென்றிருந்தார். அளவெட்டி, ஊரெழு ஆகிய கிராமங்களில் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். மாவட்ட அரசாங்க அதிபர். யாழ் மாநகரசபை முதல்வர் ஆகியோரையும் சந்தித்தார்,

(மல். நிரு)

.........

## "வெற்றிதோல்வியை பொருட்படுத்தாதீர்"

—திருமதி பாமர்

சுழிபுரம், திங்கள்

கல்வி வளர்ச்சியையும் உடல்மனவளத்தையும் தருவது விளையாட்டுத்துறையாகும் என சுழிபுரம் விக்ரோறியா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வட்டுக்கோட்டை வட்டாரக் கனிஷ்ட பிரிவினரின் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற வர்களுக்கு பரிசுகள் வழங்கிப் பேசிய திருமதி பாமர் கூறினார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அதிபர் செல்வி எஸ். சரவணமுத்து தலைமை வகிக்க, விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தேசியக் கொடியை ஏற்றிவைக்க ஆரம்பமான இவ்விளையாட்டு விழாவில் வடபகுதிக் கல்வி துணை அதிகாரியான திருமதி பாமர் மேலும் பேசுகையில் ''போட்டிகளினால் ஏற்படும் வெற்றியைக் கண்டு அதிகம் மகிழாமலும், தோல்விகளைக் கண்டு வருந்தாமலும் மேற்கொண்டு நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யவேண்டும்' என்றார். ......

## குருபூஜை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் யோகர் [illegible] 'குருபூஜை' [illegible] 19-ந் திகதி சிவதொண்டன் ஆச்சிமத்தி[illegible]

# கடத்தப்பட்ட ஜப்பானிய தூதர் விடுதலை

சாபோலோ, மார்ச் 16

கொரிலாக்களால் கடத்திச் செல்லப்பட்ட ஜப்பானிய தூதர் நொபுவோ ஒக்குச்சி நேற்றுவிடுதலை செய்யப்பட்டார். தங்களைச் சேர்ந்த ஐந்து அரசியல் கைதிகளையும் பிரேசில் அரசாங்கம் விடுதலைசெய்தால்தான் ஜப்பானிய தூதரை விடுதலை செய்ய முடியுமென கொரில்லாக்கள் அறிவித்திருந்தனர். இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் ஐந்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்துவிட்டு ஜப்பானிய தூதரின் விடுதலைக்காக எதிர்பார்த்திருந்தது. ஜப்பானிய தூதர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

## 'நாவலருக்குப்பின் சைவம் வளர்த்த பெரியார்'

### தமிழாசிரியர்சங்கம் அனுதாபம்

உரும்பராய், திங்கள்

'சென்ற நூற்றாண்டில் நமது நாட்டில் சைவத்தையும் தமிழையும் அழியாமற் பாதுகாத்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவார். நாவலர் பெருமான் சிவபதமடைந்து ஒரு சில ஆண்டுகளுக்குள் தோன்றி, அவரது அடிச்சுவட்டில் நின்று சைவத்தையும், தமிழையும் பாதுகாத்தவர் சைவப் பெரியார், திரு சு இராசரத்தினம். சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராகவு , காரியதரிசியாகவும் ஆறுந்த காலங்களில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவினார். சைவ ஆசிரியர்களை உற்பத்தி செய்யும் நோக்கமாகத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை அமைக்க அரும்பாடு பட்டார். சைவ அனாதைச் சிறார்க்கென ஓர் அனாதசாலையையும் நிறுவினார். நமது யாழ்ப்பாணத்தில் சைவமும், தமிழும், இன்றும் அழியாமல் நிலைபெற்றிருக்க இந்த நூற்றாண்டில் பெருந் தொண்டினைப் புரிந்த திரு.இராசரத்தினம்சைவப்பாடசாலைகளை நிறுவியதன்மூலம் மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு உத்தியோகம் வழங்கினார். இவர் செய்த பெருஞ்சேவையால் ஆசிரியர்கள்,விசேடமாகத் தமிழாசிரியர்கள் உத்தியோகத்துக்கு அரசாங்கத்தை எதிர்பார்க்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலை முன்னர் இருந்ததில்லை. செயற்கரும் சேவைபுரிந்த சைவப்பெரியார் திரு சு.இராசரத்தினம் மறைவு தமிழ்ப்பேசும் உலகுக்கு விசேடமாகத் தமி[...] முடியாத பெரு நட்டமாகும்'.

சென்ற வியாழக்கிழமை நீர்வேலியில் நடைபெற்ற வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் சைவப்பெரியார் சு.இராசரத்தினத்தினது மறைவு குறித்து அனுதாபப் பிரேரணையைப்பிரேரித்துப் பேசிய மேற்படி சங்கக் காரியதரிசி, அ பஞ்சாட்சரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர், திரு க இ. குமாரசாமி பேசுகையில், 'நாங்கள் தமிழாசிரியர்கள், நாங்கள் சைவ மாணவர்கள் என்று தன்மானத்துடன் கூறக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தியவர் திரு சு இராசரத்தினம் காடு மலையென்று கருதாமல் . சைவமாணவர்களது நலனை விசேடமாக மனத்திற் கொண்டு வசதியுள்ள இடங்களிலும் வசதியற்ற இடங்களிலும் கூடத்தமிழ்ப் பாடசாலைகளை பலவித இன்னல்களுக்கிடையே அமைத்தார்கள். திரு இராசரத்தினம் அவர்களின் பெரு முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட திருநெல்வேலிச் சைவ அனாதர்சாலையில் படித்த ஏழைமாணவர்கள் பலர் இன்று இலங்கையின் பல பாகங்களிலும் ஆசியர்களாகவும், உயர்தர உத்தியோகத்தர்களாகவும் விளங்கி வருகிறார்கள். சைவ சமய அடிப்படையில், தமிழ்ப்பயிரை முளை கொள்ளச் செய்து பெருமரமாக வளர்த்தபெருமை திரு சு,இராசரத்தினத்தையே சார்ந்தது' என்றார். சைவப்பெரியார் மறைவை யொட்டி

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, திங்கள்

வன்னேரி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப்பணிபுரிந்த திரு. ஏ அற்றியானந்தம் இடைக்காடு ஆங்கில மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0 0

ஊர்காவற்றுறைக் கட்டளைக் குரவர் வண. சுவாம்பிள்ளை பருத்தித் துறைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

கிளிநொச்சிக் கட்டளைக குரவர்வண. சூசைப்பிள்ளை யாழ்ப்பாணம் அடைக்கல மாதா ஆலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## 'விளையாட்டுத் துறையிலும் ஈடுபடுக'

முசலி திங்கள்

'மாணவர்கள் கல்வித் துறையில் மட்டும் தங்கி வாழ்ந்தால் அவர்கள் வருங் காலத்தில் சுறுசுறுப்புள்ளவர்களாக வர முடியாது. விளையாட்டுத்துறை யிலும் ஈடுபட்டால்தான் அவர்கள் உளஉறுதியுடன் உடலுறுதியும் கொண்டு வாழ்வார்கள் என்று முருங்கன் வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டுப் போட்டியின்பேது மன்னார் மாவட்டப் பிரதம வித்தியாதிகாரி திரு வே. நடராசா கூறினார்.

நானாட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் போட்டி இடம்பெற்றது. வெற்றபெற்ற மாணவ மாணவிகளுக்கு அவர் பரிசுகளை வழங்கினார்.

### அம்பாறையில்

## சென் பற்றிக்ஸ் பழைய மாணவர் சங்கம்

அம்பாறை, திங்கள்

அம்பாறை மாவட்டத்திலும் அதன் அயல் இடங்களிலும் கடமையாற்றும் யாழ், அர்ச். சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றுகூடி அர்ச் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர்.

ஆரம்பக் கூட்டத்தில் சம்பத்திரிசியார் கல்லூரியின்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வார்த்தை நடத்தவிருக்கிறார் கம்போடியாவின் நடுநிலைமையைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கு உதவி புரியும்படி அவர் சோவியத்தலைவர்களைக் கேட்டிருக்கிறார். இதே போன்றுசீனத்தலைவர்களையும் அவர் கேட்கவிருக்கிறார். கம்போடியாவிலிருந்து வியட்காங்கியரைவெளி அதுவாணித்தது.

மாஸ்கோவந்துள்ள கம்போடியத்தலைவர் இளவரசர் சிஹானுக்கு இன்று சீனத்தலைநகருக்குச் செல்ல விருந்தார் ஆயினும் அவர் தமது மாஸ்கோவிஜயத்தை மேலும் சிலதினங்களுக்கு நீடித்திருக்கிறார்.

# சைப்ரஸ் முன்னாள் மந்திரி சுட்டுக்கொலை

நிக்கோஸியா, மார்ச் 16

சைப்ரஸின் முன்னாள் உள்விவகார அமைச்சர் சுட்டுக்கொல்லப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டார். ஒரு காருக்குள் அவர் இறந்து கிடந்தார். கொலைகாரன் யார் என்பது இன்னும் தெரியவில்லை.

தொலைபேசியில் வந்த ஒரு அழைப்பைத் தொடர்ந்து அவர் வீட்டிலிருந்து புறப்பட்டுச்சென்றார். வழியில் மறைவிடத்திலிருந்து இனந்தெரியாத ஒருவர் அவரைச்சுட்டதாகக் கருதப்படுகிறது. இக்கொலை பற்றிவேறு விபரம் எதையும் சைப்ரஸ் அரசாங்கம் தெரிவிக்கவில்லை. சைப்ரஸ் தலைநகரான நிக்கோஸியாவுக்குச் சிலமைல்தூரத்தில் கொலையுண்ட நிலையில் அவர் காருக்குள் கிடக்கக் காணப்பட்டார்.

சைப்ரஸ் அதிபர் அர்ச்பிஷப் மக்காரியோஸைக் கொலைசெய்வதற்கு சமீபத்தில் நடந்த சதியில் இப்பொழுதுகொலையுண்ட முன்னாள் அமைச்சருக்கும் பங்கிருந்ததாக அச்சமயத்தில் புகார்கூறப்பட்டது. ஆனால் இப்புகாரை அவர் மறுத்திருந்தார்.

## ‘இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் சதித்திட்டம் எதுவுமில்லை’

### அமைச்சர் சவான் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 16

இந்தியாவில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தச் சதி எதுவும் நடப்பதாகக் கருத இடமில்லை என்று அண்மையில் லோகசபையில் உள்துறை மந்திரி சவான் கூறினார்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது சேனாதிபதியாக விருந்த ஜெனரல் காரியப்பாவின் அறிக்கை பற்றிய பிரேரணைக்குப் பதிலளிக்கையில் தீவிர வலதுசாரிகள், தீவிர இடதுசாரிகள் ஆகிய இரு பகுதியினரிடமிருந்தும் நாட்டின் ஜனநாயகத்திற்கு அபாயம் இருப்பதாக அமைச்சர் சவான் கூறினார். இப்பேச்சினிடையே ஜெனரல் காரியப்பாவின் பென்ஷனை நிறுத்தும் உத்தேசம் இல்லையென்றும் தெரிவித்தார்.

இராணுவ ஆட்சி ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி இரு தரப்புக் காங்கிரஸ்கட்சிகளிலுமுள்ள சில அரசியல் வாதிகள் தமமைக் கேட்டனர் என்று திரு. காரியப்பா கூறியதாகச் சொல்லப்படுவது குறித்து கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் பலர் உள்துறை அமைச்சர் திரு. சவானிடம் கேள்விகள் கேட்டனர்.

ஜெனரல் காரியப்பாவை தாம் சந்தித்த போது அவரைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு அவரது அறிக்கை தம்மிடம் இல்லை என்றும் அவரைக் குறுக்கு விசாரணைசெய்வது தமது நோககமல்லவென்றும் திரு. சவான் பதிலளித்தார்.

மேலும் காரிப்பா மதிப்புக்குரிய மூத்த மனிதரென்றும், தாம் கூட அவரிடத்தில் மதிப்பு வைத்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்

நாட்டின் அரசியலசட்டத்தைத் தகர்க்க முற்படும் செயல்கள் அல்லது கருத்துக்கள் ஜெனரல் காரியப்பாவிடமிருந்தோ, வேறு யாரிடமிருந்தோ வெளிப்பட்டாலும் அவை கண்டனத்திற்குரியவையே என்று ஜனசங் உறுப்பினர் திரு. எஸ். கோத்தாரி கூறினார்.

## இருவர் பலி

கல்கத்தா, மார்ச் 16

மேற்கு வங்காளத்தில் ஜபல்பூர் பகுதியில் இன்று அதிகாலை ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர் ஒரு வீட்டின் கூரையே வெடித்துப்பறந்ததாம்.

'காந்த பாலமண்டலய போன்ற மக்கள் நிறுவனங்கள் கூட்டணியின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்து விளக்கி திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்திரமான சோஷலிச அரசாங்கத்தை நிறுவுவதற்கு மட்டுமல்ல கூட்டணியின் திட்டங்களையும் உறுதி மொழிகளையும் செயல்படுத்துவதற்குமேயாகும்',

கண்டி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற கண்டி தேர்தல் தொகுதிகளின் சுதந்திரக் கட்சி மாதர்கள் கூட்டத்தில் பேசுகையில் கொலனாவை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. ரி. பி. இலங்கரத்தின பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. இலங்கரத்தின மேலும் தொடர்ந்து பேசுகையில் இந்தியர் பிரச்னையைப் பொறுத்த வரையில் அப்பிரச்னையை அப்போது இந்தியாவின் பிரதமராகவிருந்த திரு. சாஸ்திரியோடு சேர்ந்து தீர்த்துவைத்தது திருமதி பண்டாரநாயக்காவே சுதந்திரக்கட்சி அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தபோது வேலையில்லாப் பிரச்னை தற்போதைய அளவுக்கு இருக்கவில்லை. உலகில் எந்த இடத்திலாவது டாக்டர்கள் வேலையின்றி கஷ்டப்படுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா இன்று இங்கு திரு. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தின் கீழ் டாக்டர்கள் வேலையின்றியிருக்கிறார்கள்.

முதலாளித்துவ அரசாங்கத்தின்கீழ் வறிய மக்கள் மிகக் கஷ்டப்படுகிறார்கள் முதலாளி வர்க்கத்தினர் ஒரு குறையுமின்றி வாழ்கிறார்கள். திரு. பிலிப்குணவர்த்தனாவின்கீழ் அரசாங்க கைத்தொழில்கள் யாவும் பாழாகின்றன. மகாவலி திருப்புத்திட்டம் என்ற பெயரில் நாட்டைத் தேசிய அரசாங்கம் உலக வங்கிக்கு 30 வருடங்களுக்கு ஈடுவைத்துள்ளது. எனக் குறிப்பிட்டார்.

## டி. எஸ் சிரார்த்ததினம்

கோட்டை, திங்கள்

காலஞ்சென்ற இலங்கையின் முதல் பிரதமர் திரு. டி. எஸ் சேனநாயக்காவின் 18-வதுசிரார்த்ததினம் இம்மாதம் 22-ம் திகதி நாடு பூராவும் கொண்டாடப்படவிருக்கிறது. அன்றைய தினம் டி. எஸ். சேனநாயக்கா ஞாபகார்த்த குழு சங்க அங்கத்தினருக்கு தானம் வழங்க ஒழுங்கு செய்துள்ளது. நாடு பூராவும் ஆங்காங்கே பொதுக்கூட்ட வைபவங்களும் இடம்பெறும்.

கரண[illegible]ய் வடக்குப் பிரிவில் அதிக மக்கள்இருப்பதனாலும், இமையாணன்பகுதி மக்கள் நீண்டதூரம்சென்று கஷ்டப்பட்டு காரியங்களைக் கவனிக்க வேண்டியதினாலும் இப்பு[illegible] பிரிவு நீண்டகால முயற்சியின்பின் அமைக்கப்பட்டது.

## சுதந்திரக்கட்சி 467 கைத்தொழில்களை ஆரம்பித்தது

மிதெனியா, திங்கள்

1956ம் ஆண்டு சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தபோது வாழைச்சேனை கடதாசித்தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஆகிய இரண்டுமே நாட்டில் இருந்தன. சுதந்திரக்கட்சி பதவி ஏற்றதும் 467கைத்தொழில்களை நாடெங்கும் ஆரம்பித்தது. அதனால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்ததோடு ஆயிரக் கணக்கானோர் வேலைவாய்ப்பும் பெற்றார்கள்.

முள்கிரிகலைத் தொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய வண வஜ்ஜிரபுத்திரதேரோ பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் தேசிய அரசாங்கம் கடந்த 5 வருடகாலப்பகுதியில் ஒரு கைத்தொழிலைத் தானும் நிறுவவில்லை அவர்கள் செய்தவேலை என்னவெனில் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்களில் சிலவற்றை திறந்து வைத்தமையேயாகும்.

திருவாளர்கள் ஜோர்ஜ் இராஜபக்சா, ஆர்.ஏ. சுகததாசா உட்படப் பலர்உரையாற்றினர்.

## சிவராத்திரி விழா

புதுக்குடியிருப்பு, திங்கள்

புதுக்குடியிருப்பு சைவநெறிக் கழகத்தின் ஆதரவில் புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவிலில் நான்கு சாமப் பூசைகளுடன் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் திரு கு வி. செல்லத்துரை தலைமையில் திரு. பே சின்னப்பு, கா. தம்பாப்பிள்ளை, திரு. சிவக்கொழுந்து, திருமதி உமாசண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மாணவிகளினால் பரத நாட்டியமும், கிராமிய நடனமும் கோலாட்டமும் ‘சங்கனார்க்கு ஏது குலம்?’ என்ற நாடகமும் நடைபெற்றது.

## குருபூஜை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் யோகர் சுவாமியாரத ‘குருபூஜை’ இம்மாதம் 19-ந் திகதி சிவதொண்டன் ஆச்சிமத்தி[illegible] நடைபெறவுள்ளது விசேஷ ஆராதனை, நடைபஜனை, கூட்டுப்பிரார்த்தனை முதலியன நடைபெறுவதோடு அன்று மகேசுர பூஜையும் சுவாமிகளின் பெயரால் நடாத்தப்படும்,

யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதிலுமுள்ள ஆலயங்களிலும் பூஜை செய்து பிரார்த்திக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. கு. வி. ம.

## குருத்தோலை ஞாயிறு

பண்டைத்தரிப்பு, திங்கள்

இம்மாதம் 22ம் திகதி நடைபெறவிருக்கும் குருத்தோலைத் திருநாளைமுன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மாலை 7லிருந்து 7-30வரை விசேட நிகழ்ச்சியாக ‘கிறீஸ்து ராஜாவின் வெற்றிப் பவனி’ என்ற நாடகம் பர்னாந்து சகோதரர் தயாரித்து அளிக்கிறார்.

அன்றையதினம் திருமறைக்கலா மன்றத்தினர் உரும்பராய் புனித மிக்கேல் ஆலய முன்றலில் ‘கண்ணீர் வடித்த கடவுள்’ என்ற இசைஉரை நாடகச் சித்திரத்தை மேடையேற்றுவர். இதனைத் திருமறைக்கலா மன்ற இயக்குநர் வண. சவரிமுத்து தயாரித்துள்ளார்.

## திறப்புவிழா

உரும்பராய், திங்கள்

உரும்பராய் ஐக்கிய பண்டகசாலையின் புதிய மேல் மாடிக்கட்டிடத்தை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எவ். ஸி. பீட்டர்ஸ் வருகிறபுதன் கிழமை மாலை திறந்து வைக்கிறார்.

சங்கத்தலைவர் திரு. சி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் இத்திறப்புவிழாவில் கூட்டுறவு ஆணையாளர் திரு க. சிபொன்னுத்துரை யாழ். மாட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## பாதையில் செத்தயானை

பூநகரி, திங்கள்

பூநகரி மன்னார் வீதியில் இறந்துகிடக்கும் யானையின் உடல்இதுவரை அப்புறப்படுத்தப்படாததினால் இப்பகுதியில் வீசும் துர்நாற்றத்தை சகிக்கமுடியாமல் இருக்கிறது. பலநாட்களாகியும் இது அகற்றப்படவில்லையாம்.

[illegible] பார்க்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலை முன்னர் இருந்ததில்லை. செயற்கரும் சேவைபுரிந்த சைவப்பெரியார் திரு சு. இராசரத்தினம் மறைவு தமிழ்ப்பேசும் உலகுக்கு விசேடமாகத் தமிழாசிரியர்களுக்கு ஈடுசெய்ய சமய அடிப்படையில். தமிழ்ப்பயிரை முளை கொள்ளச் செய்து பெருமரமாக வளர்த்தபெருமை திரு சு. இராசரத்தினத்தையே சார்ந்தது’ என்றார். சைவப்பெரியார் மறைவை யொட்டி மௌனப் பிரார்த்தனையும் அநுட்டிக்கப்பட்டது.

“நாம் அழிந்துவிடாதிருக்க . . .

# எமக்கென ஒரு இடம் வேண்டும்”

— எஸ். ஜே வி.

உடுப்பிட்டி, திங்கள்

‘வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுமானால் தமிழினம் அழிந்துவிடும். எமக்கென ஓர் இடம் இன்றேல் நாம் அழிந்துவிட நேரிடும்.’

இவ்வாறு தமிழரசுக்கட்சி ஸ்தாபகரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு எஸ் ஜே வி செல்வநாயகம் அல்வாய் மாலிசந்திப்பிள்ளையார் கோவில் முன்றலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்..

திரு மு பொ வீரபாகு தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு செல்வநாயகம் தொடர்ந்து கூறியதாவது:

தமிழரசுக்கட்சி தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்திட்டங்களைக் கடுமையாக எதிர்த்து வருகின்றது-

தமிழரசுக்கட்சி 1965ம் ஆண்டிலிருந்து மூன்றரை வருடங்களாக அரசாங்கத்தில் அங்கம் வகித்தது இது வரை தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் பிரதேச மொழியாக இருக்கின்றது

வடபகுதியில் கரவெட்டி அச்சுவேலி, புத்தூர், அல்வாய் ஆகிய இடங்களில் பௌத்த பாடசாலைகளை நிறுவித் தமிழினத்தை அழிக்க முயல்கின்றனர். ஆதலால் தமிழ் பிள்ளைகள் தமிழையே படிக்க வேண்டும்

தமிழர்கள் தனியினமாக வாழ வேண்டும். சிங்கள அரசியல்வாதிகள் இந்நாட்டிலுள்ள 20 லட்சம் தமிழர்களை சிங்களவர் ஆக்க முயற்சிக்கின்றனர்.

திரு. ஜெயக்கொடி பேசுகையில், உண்மையான தொண்டர்களையே ஆட்சிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஏகோபித்த முறையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். இரண்டு கட்சியாக அனுப்பாது ஒரேகட்சியாக அனுப்பினால் சங்கடங்கள் ஏற்படாது என்று கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. க. பொ. இரத்தினம், திரு. மு ஆலாலசுந்தரம் உட்பட வேறுபலரும் பேசினர்.

மண்டானிலிருந்து கரணவாய், நாவலர்மடம், நெல்லியடி, வதிரிச்சந்தியூடாகவும். புலோலிஓராங்கட்டையடியிலிருந்து ஆத்தியடி, தம்பசிட்டி, ஊடாகவும் ஊர்வலங்கள் கூட்டமைதானத்தை வந்தடைந்தன.

## “வெற்றி தோல்வி ஒரு தத்துவம்”

மட்டுவில், திங்கள்

“மனித வாழ்க்கையிலே வெற்றியும் தோல்வியும் சகஜம் இந்த அடிப்படைத்தத்துவத்தை மாணவர்களுக்கு இளமையிலிருந்தே சிறுகச் சிறுகப் போதித்து வெற்றியையும், தோல்வியையும் சமாளித்து வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிவகைகளை விளையாட்டுகள் மூலமே புகுத்த முடியும்”.

இவ்வாறு சாவகச்சேரி வட்டார கனிஷ்ட வித்தியாலயங்களின் மெய்வல்லுனர் விளையாட்டுதிறனாய்வுபோட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வட்டார பிரதேசக்கல்வி ஆலோசகர் திரு. க. கனகசபாபதி கூறினார்.

மட்டுவில் கந்தர் மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் நேற்று இப்போட்டி நடைபெற்றது.

வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி நா கந்தசாமி பரிசில்களை வழங்கினார். ஆசிரியர் திரு. வி. ரி. நடராஜா நன்றியுரை நிகழ்த்தினார்.

லூரி பழைய மாணவர்கள் ஒன்றுகூடி அர்ச் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை ஸ்தாபித்துள்ளனர்.

ஆரம்பக் கூட்டத்தில் சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்த காலம் சென்ற வணக்கத்துக்குரிய சார்ல்ஸ் என் எம் மத்தியூசின் ஆத்மசாந்திக்காக 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

சங்க உத்தியோகத்தர் விபரம் வருமாறு: தலைவர்- திரு பி பஞ்சாமிருதம், உபதலைவர்- திரு எஸ் குணரத்தினம், காரியதரிசி திரு சின்கிளயர் பீட்டர், தனாதிகாரி- திரு எஸ் ஏ யேமிஸ், போஷகர்- வண கபிரியேல்.

பாலைதீவுப் படகு விபத்தில் அகால மரணம் எய்தியவர்களுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் பத்திரிகைகளினால் ஆரம்பிக்கப்பட்ட ‘பாலைதீவு விபத்து நிவாரண நிதிக்குப் பணம் திரட்டுவது என்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ். 17—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம். 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம் 7-03 கிராமசஞ்சிகை, 7-15 வீணை, 7-45 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

புத்தகங்களின் எண்ணிக்கையால் புத்தகாலயம் மதிப்புப்பெறுவதில்லை. சிறந்த புத்தகங்கள் அங்கு இருப்பதாலேயே சிறப்புறுகின்றது.

— வினோபாவே.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 4-ந் திகதி (17-3-70)


## கொசு ஒழிப்பு வாரம்

கொசுத்தொல்லையை ஒழித்துக்கட்டுவதற்கென கொழும்பு மாநகரசபை கொசு ஒழிப்பு வாரமொன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்த வாரத்தை கொழும்பு நகரமேயர் திரு. வின்சன்ட் பெரேரா ஆரம்பித்துவைத்து விடுத்துள்ள செய்தியில். மக்களுக்கு மக்களுக்காக வேலை செய்யாமல் மக்களுடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார். சமீபத்தில் நாடு முழுவதிலும் உள்ளூராட்சிவாரம் கொண்டாடப்பட்டது. மக்கள் தங்கள் கிராமம் தங்கள் நகரம், தங்கள் நாடு என்ற உணர்வு பெற இது பெருமளவு உதவியிருக்க வேண்டும். இந்த உணர்வை மேலும் தூண்டுவதற்கு கொழும்பு நகரில் கொசுஒழிப்புவாரம் பெரிதும் உதவும் என்று நம்பலாம். கொசுத்தொல்லையால் கொழும்பு நகரமக்கள் மட்டுமல்ல யாழ்ப்பாணம் உட்பட இதர பல நகரங்களில் வாழும் மக்களும் அவதியுறுகின்றனர். கொழும்பு மாநகரசபை காட்டும் முன்மாதிரியை இதர உள்ளூராட்சி மன்றங்களும் பின்பற்றி வெற்றிகாணலாம்.

கொசுக்கடி காரணமாக பலவித நோய்கள் பரவுகின்றன. மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது கடந்த பல வருடங்களாகக் கொழும்பு நகரமக்கள் கொசுத்தொல்லையால் அவதியுற்றனர். சுகாதார இலாகா கவனிக்கும், அரசாங்கம் கவனிக்கும், மாநகரசபை அதிகாரிகள் கவனிப்பார்களென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். சுகாதார இலாகாவும் சரி மாநகரசபை அதிகாரிகளும் சரி ஏதோ ஓரளவு முயற்சி செய்து பார்த்தனர். ஆனால் எதிர்பார்த்தபடி வெற்றி கிடைக்கவில்லை. மக்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் கொசுத்தொல்லையை ஒழித்துவிடலாமென்றும் இதற்கு மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் கிடைக்குமென்றும் கொழும்பு மேயர் எதிர்பார்த்தது வீண்போகமுடியாது.

யாழ்ப்பாண நகரிலும் கொசுத்தொல்லை கொஞ்சமல்ல. சுகாதார அதிகாரிகள குறிப்பாக மலேரியாத்தடுப்பு இயக்கத்தினர் சில இடங்களில் எப்போதாவது மருந்துதெளித்து கொசுக்களை ஒழிக்க ஏதோ முயற்சி செய்கின்றனர். ஆனால் அது வெற்றியளித்தது என்று சொல்லமுடியாது.

கொழும்பு மாநகரசபையைப் பின்பற்றி யாழ்ப்பாண மாநகரசபையும் பொது மக்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் கொசுத்தொல்லையை ஒழித்துக்கட்ட முயற்சிசெய்தால் அது பெருமளவில் பயன்படும் என்று நம்பலாம். கொசுத்தொல்லையை ஒழிப்பதற்கு மட்டுமல்லாமல் நகரின் அபிவிருத்திக்கு இன்னும் பல காரியங்களையும் செய்ய முடியும்.

## ஒழுக்கத்துக்குப் புள்ளி

மாணவர்களின் படிப்புக்கு புள்ளிகள் போட்டு அவர்களுக்குப் படிப்பில் ஊக்கமளிப்பது போல் மாணவர்களின் ஒழுக்கம், நடத்தை, கட்டுப்பாட்டு என்பவற்றிற்கு புள்ளிகள் கொடுக்கப்படுவது தமிழ் நாட்டிலுள்ள இரு பாட... தீர்வுகாண உருப்படியாக எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. மாணவர்களின் பிரச்னைகளையும் அரசியல் பிரச்னைகளாகவே முயற்சிசெய்கின்றனர். இதர நாடுகளிலும் மாணவர் பிரச்னைகள்...

## துயரம் நிறைந்த கச்சதீவு யாத்திரை (4)

# கடற்படையினர் யாத்திரிகர்களுக்களித்த மறக்கமுடியாத ஆறுதல்

வி.இன்னாசிமுத்து

உணவின்றியும் நீரின்றியும் தவித்த பலருக்கு உணவளித்தவர்களைப்பற்றி நேற்றுகுறிப்பிட்டிருந்தேன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ் சண்முகராசா குடும்பமும் வவனியாவைச் சேர்ந்த சூரியபுத்திரனின் குடும்பத்தினருமே உணவு படைத்து தவித்தவர்களுக்கு கொடுப்பதில் முன்னின்றவர்களாவர்.

மகாலட்சுமியில் ஏறிய நாம் கஜபாகு கப்பலை அடைந்தோம். கஜபாகுகப்பலில் எம்மை கடற்படை வீரர்கள் கைலாகு கொடுத்து ஏற்றினர். கரையில் இருந்து யாத்திரிகர்களை கஜபாகு கப்பலுக்குக் கொண்டு சென்றதற்காக யாத்திரிகர்களிடம் பணம் பெறும்படி கடற்படை அதிகாரியொருவர் மகாலட்சுமி படகில் வேலை செய்து கொண்டு நின்ற உரிமையாளரிடம் கூறியபோது அவர் யாத்திரிகர்களிடம் பணம் வாங்க மறுத்துவிட்டார். இவர் அனலைதீவு கிராமசபையின் முன்னாள் தலைவர் என அறியவந்தேன். அவருடைய பெருந்தன்மையை மகாலட்சுமியில் வந்தவர்கள் வெகுவாகப் பாராட்டினர்.

கரையில் நின்றமற்ற மீன்பிடி வள்ளங்களும் யாத்திரிகர்களை கஜபாகுக் கப்பலுக்குக் கொண்டு வந்தன. கஜபாகு கப்பலின் மேற்தளத்துக்கு அதிகாரிகளின் உத்தரவின் பேரில் நாமெல்லோரும் சென்றோம். அங்கு கடற்படையினர் பாணும் தேநீரும் கொடுத்து யாத்திரிகர்களின் பசியை ஆற்றினர். காலை 9-50 மணி நங்கூரம் இழுக்கப்பட்டது. மீண்டும் நாம் கீழ் தளத்துக்கு வந்தோம்.

சரியாகப் பத்து மணிக்கு கப்பல்புறப்பட்டது. காரைதீவு கடற்படையினரின் இரு படகுகள் கஜபாகுவின் பின்னனேவரகஜபாகுதனது ஆழ்கடல் பயணத்தைத் தொடங்கியது.

நாளெல்லாம் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த எமக்கு கப்பலில் பிரயாணம் செய்யும்போது ஏற்பட்ட மகிழ்ச்சியை எப்படித்தான் சொல்வது

கஜபாகு கப்பலில் பிரயாணம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டதில் மகிழ்ச்சிகொண்ட பிரயாணிகள் கப்பலைச் சுற்றிப் பார்ப்பதில் ஈடுபட்டனர். கச்சதீவு மறையத் தொடங்கியது. கடற்படையினரின் இரு படகுகளும் எங்களை விட்டுப் போய் விட்டன.

கஜபாகு மாத்திரம் எம்மைச் சுமந்து கொண்டு அமைதியாக சென்று கொண்டிருந்தது. கடற்படைவீரர்கள் எம்முடனே இருந்தனர். தேநீரும் குளிர்பானமும் தோடம்பழச்சாறும் யாத்திரிகர்களுக்களிதது அவர்கள் மகிழ்ந்தனர். இத்தனை அன்பாகப் பழகிய அவர்களை யாத்திரிகர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

கஜபாகு கப்பலில் பிரயாணம் செய்த சிறுவன் ஒருவனும் மூன்று வயதுக் குழந்தையும், நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதை அவதானித்த கடற்படையினர் நேரத்துக்கு நேரம் அவர்களுக்கு மருந்து கொடுத்துக் கவனித்தவண்ணமேயிருந்தனர்.

சுமார் மூன்று மணி இருக்கும். எங்கள் கண்களுக்கெட்டிய தூரத்தில் கடற்படையைச் சேர்ந்த சுமார் பத்துப் படகுகள் வரிசையாக ஒன்றுக்குப்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு அழகாகவிருந்தது. கடற்படைப் படைப் படகுகள் எங்களை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தன. அப்போது ஜாம் பூசப்பட்ட பாண்துண்டுகளை ஏந்தியவாறு கடற்படையினர் யாத்திரிகர்களிடையே வந்தனர். தேநீரும் கொண்டு வரப்பட்டது.

'பாணைச் சாப்பிட்டு தேநீரை குடித்துவிட்டு தயாராகவிருங்கள். உங்களைக்கரைசேர்க்க படகுகள் வந்து கொண்டிருக்கின்றன'- இப்படி கஜபாகு கப்பல் அதிகாரியொருவர் அறிவித்ததும் சகலரும் ஆயத்தமானோம். கப்பல் எந்த இடத்தில் நிற்கிறது. நாம் எத்துறைக்குப் போகப் போகிறோம் என்பதெல்லாம் எமக்குத் தெரியாது.

கஜபாகு நங்கூரமிட்டுக் கொண்டது. நாம் ஆயத்தமானோம். கடற்படையைச் சேர்ந்த பத்துப் படகுகள் கஜபாகுவைச் சூழ்ந்து கொண்டன. அப்போது கடற்படைக்கப்பல்களில் இருந்துவந்த பேரிரைச்சல் யுத்தத்தின்போது ஓர் எதிரிக்கப்பலைச் சுற்றிவளைத்து நிற்பதைப் போன்று அவை நின்றன.

ஒவ்வொரு படகிலும் இருபத்தைந்து பேராக ஏற்றப்பட்டோம். கஜபாகு கப்பலுக்கும்அதன்வீரர்களுக்கும் கையசைத்து விடை கொடுத்துவிட்டு நாம் நமது பிரயாணத்தை தொடங்கினோம் மலைபோல் வரும் அலைகளைக் கிழித்தவண்ணம் பேரிரைச்சலோடு படகுகள் புறப்பட்டன: ஒவ்வொரு படகும் ஒன்றையொன்று முந்திச் செல்வதற்கு முனைந்து கொண்டிருந்தன. அப்போது எமது படகில் இருந்த இளம்பெண்ணொருவர் மயக்கமடைந்தார். கடற்படையினர் முதலுதவி அளித்தும் மயக்கம் தெளியாததால் காரைநகர் கடற்படை முகாமுக்குத் தகவல் கொடுத்தனர். 'ஸ்ரெச்சர் பார்ட்டி' கரையில் தயாராக நின்றது. மயக்கமடைந்த பெண்ணை முதல் உதவி அறைக்கு எடுத்துச் சென்றனர்.

கடற்படை முகாமில் பாணும் பழமும் கொடுத்து யாத்திரிகர்களை உபசரித்தனர் காரைதீவு கடற்படையினர், நேரம் 5-30 இருக்கும் 'பிரயாணக் களைப்புடன் போய் உணவு சமைக்க இயலுமா? பாணையும் பழத்தையும் கொண்டு செல்லுங்கள் என்று கூறி யாத்திரிகர்களிடம் அவற்றைக்கொடுத்தனர் கடற்படையினர். பால்கட்டிய அடையாளம், பால்கட்டியதற்கான அத்தாட்சிப்பத்திரம் முதலியவற்றை பொலிசார்பார்வையிட்டு கொழும்பு செல்லும் யாத்திரிகர்களை விசேஷ பஸ் மூலம் புகையிரத நிலையத்திற்கு அனுப்பி வைத்தனர்.

யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகளை வேறொருபஸ்ஸில் ஏற்றினர். சுங்கப்பகுதியினரும் யாத்திரிகர்களுக்கு இம்சைதரவில்லை. களைத்து சோர்ந்துவந்த யாத்திரிகர்களை கடற்படையினரும், பொலிசாரும், சுங்கப்பகுதியினரும் அன்பாக நடாத்தி வழிஅனுப்பினர் எங்களுடன் வந்தவர்களில் நால்வரை சட்ட விரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தில் இரகசியப் பொலீசார் கைது செய்தனர். துயரம் நிறைந்த கச்சதீவுயாத்திரையின் இறுதிக்கட்டமாக நாம் பஸ்வண்டியில் பிரயாணம் செய்து வீட்டை அடைந்தோம்

(முற்றும்)

தமிழரசு

# தேர்தல் விஞ்ஞாபனம் விரைவில் வெளிவரும்

உடுப்பிட்டி, திங்கள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் விரைவில் வெளியிடப்படும். தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 14, 15ந் திகதிகளில் உடுப்பிட்டித்தொகுதியில் நாவலர் மடம் என்னுமிடத்தில் சமாதான நீதிபதி ... கமிட்டி உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழரசு அபேட்சகர்களைத் தெரிவுசெய்வது பற்றியும், தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிப்பது பற்றியும் இக்கூட்டத்தில் இரு தினங்களும் ஆலோசனை செய்யப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் 1965ம் ஆண்டைவிட மேலானதாக அமையுமென்றும், 1956ம் ஆண்டு கட்சி தனது இலட்...

## இறக்குமதியைக் குறைத்து

## "சாயிபாபா அற்புதங்களை நேரில் கண்டோம்"

மகாசிவராத்திரி அன்று பகவான் சத்தியசாயிபாபாவின் அற்புதச் செயல்களைத் தெல்தெனியா தபால்நிலைய அதிபர் திரு. துரைசிங்கம் தம்பதிகள் நேரில் கண்டு களித்த விபரத்தை திருமதி கமலா துரைசிங்கம் இங்கு கூறுகிறார்:

பகவான் சத்தியசாயிபாபாவின் அற்புதச் செயல்களைக் கேட்டபோது அவற்றை நான் நம்பவேயில்லை. மக்கள் அவற்றை நம்பும்போது அவர்கள் மேல் ஆத்திரமும் அவர்களுடைய அறியாமையைக் கண்டு அனுதாபமும் கொண்டேன். என்னையறியாமல் ஓர் உள்ளுணர்வு இவ்வற்புதச் செயல்களை நேரில் பார்த்துவிடவேண்டும் எனத் துடித்தது. அதற்குரிய சந்தர்ப்பமும் கைகூடவே கடந்த மாதம் 6ந் திகதி அதாவது மகாசிவராத்திரியன்று காலை 8மணிக்கு நாம் மனைவி சகிதமாக பகவான் சாயிபாபாவிடம்சென்றோம். அப்போது அவருடைய சிஷ்யர்கள் கூடியிருந்து பஜனைசெய்து கொண்டிருந்தனர். கிருஷ்ண பகவான் மேல் பக்திப் பாடல்களை அவரும் பாடினார். கணீரென்ற குரலால் அவர் பாடுவதைக் கூடியிருந்த மக்கள் கேட்டு மெய்மறந்திருந்தனர்.

காலை 11 மணியளவில் அவருடைய முதல் அவதாரமாகிய சிருடி பாபாவின் சிலைக்குப் பால் முதலிய அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகம் செய்யப்பட்டது பின்னர் காரியதரிசி திரு. கஸ்தூரி என்பவர் ஒரு வெள்ளிக் குடத்தைக் கொண்டுவந்து, சிலைக்கு மேல் பிடிக்க, பகவான் சத்தியசாயிபாபா தமது வலக் கையாலும், இடக் கையாலும் இருமுறை தடவினார். பகவான குடத்தை வருடவும் யந்திரம் தான் இவ்வளவு விபூதிகளை அள்ளித் தூவுகிறதோ என எண்ணும்படி 4, 5 குடம் அளவு பெருந் தொகையான திருநீறு சிலையில் வந்து கொட்டியது. வெறும் குடத்திலிருந்து இவ்வளவு திருநீறு எங்கிருந்து தான் வந்ததோ என நாமெல்லோரும் ஆச்சரியத்தில் மூழ்கியபடி இந்நிகழ்ச்சிகளைக் கவனித்தோம்.

இரவு 8 மணிக்கு பகவான் சாயிபாபா மேடையில் தமக்கென வைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் வந்து அமர்ந்தார் தமக்கு முன்னால் பேணியில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை அருந்திவிட்டு இருமுறை தமது உடம்பை அசைத்தார். அவ்வளவுதான் ஒரு ஜோதிமயமான 3அங்குல உயரமுள்ள லிங்கமொன்று அவருடைய வாயிலிருந்தும் வெளியே வந்தது. அவர் அந்த லிங்கத்தை அருகிலிருந்த மேசைமேல் வைத்தார். இரவு 8-45 மணிக்கு பாபா தமது பிரசாந்தி நிலையத்துள் ஆறுதல்பெறச் சென்றுவிட்டார். அடுத்த நாள் காலை 7 மணி வரையும் அந்த லிங்கம் மக்கள் பார்வைக்காக மேடையில் வைக்கப்பட்டிருந்தது.

இந்த அற்புதங்களைக் கண்டுகளிக்க ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கு குழுமியிருந்தனர். இவ்வளவு பெருந்தொகையான மக்களைக் கட்டுப்படுத்த, ஆக 4 பொலிஸாரும், ஒரு பொலிஸ் அதிபருமே நின்றார்கள், பகவானின் பெருங்கருணைபோலும் யாவும் அமைதியாகவும், ஒழுங்கு முறையாகவும் பூரண திருப்தியோடு சிவராத்திரி விழா இவ்வற்புதங்களோடு முற்றுப்பெற்றது.

## 3-ம் வகுப்பு பிரயாணியின் கஷ்டத்தை மந்திரி மாறுவேடத்தில் சென்று கண்டார்

புதுடில்லி, மார்ச் 16

இந்திய ரெயில்வே மந்திரி திரு. நந்தா மாறுவேடத்தில் சென்று மூன்றுவது வகுப்புப் பிரயாணிகளின் நிலைமையை நேரில் அறிந்தார்.

இந்திய ரெயில்வே மானியக் கோரிக்கைமீது விவாதம் நடந்தபோது பாராளுமன்றத்தில் மூன்றுவது வகுப்புப் பெட்டிகளில் வசதிக்குறைவிருப்பதாக அங்கத்தவர்கள் தெரிவித்த புகாரை அடுத்து அமைச்சர் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டார்.

திரு. நந்தா டெல்லிக் கருகிலேயுள்ள காஜியாபாத்நிலையத்துக்குத் திடீரெ...

## செய்திச் சுருக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளிப்பது போல் மாணவர்களின் ஒழுக்கம், நடத்தை, கட்டுப்பாட்டு என்பவற்றிற்கு புள்ளிகள் கொடுக்கப்படுவது தமிழ் நாட்டிலுள்ள இரு பாடசாலைகளில் 'பரீட்சார்த்த மாக செய்து பார்க்கப்படுகிறது இது நல்ல பயன் தந்தால் சகல பாடசாலைகளும் இந்த முறையைப் பின்பற்றும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாட்டின் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

நமது நாட்டிலும் மாணவர்களின் ஒழுககம் நடத்தை, கட்டுப்பாடு குறைந்துவிட்டதாக ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் உட்படப் பலரும் கவலை தெரிவித்து வருகின்றனர். ஆனால் மாணவர்களின் பிரச்னைகளை ஆராய்ந்து அவற்றுக்கு ஒரு நல்ல தெரியவில்லை. மாணவர்களின் பிரச்னைகளையும் அரசியல் பிரச்னைகளாகவே முயற்சிசெய்கின்றனர். இதர நாடுகளிலும் மாணவர் பிரச்னைகள் இல்லாமலில்லை. அந்தந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளையும் அந்த நாடுகளின் அனுபவங்களையும் ஆராய்ந்து இங்கும் பரீட்சார்த்தமாகவாவது பின்பற்றிப் பார்க்கலாம். இந்தவகையில் தமிழ்நாட்டில் இரண்டு பாடசாலைகளில் பின்பற்றப்பட்டுவரும் ஒழுக்கம் நடத்தை, கட்டுப்பாடு என்பனவற்றுக்குப் படிப்புக்கு வழங்கப்பட்டுவருவது போன்று புள்ளிகளை வழங்கி சிறு வயதிலேயே மாணவர்களை நல்ல பழக்கவழக்கத்திற்கு வழிகாட்ட முயற்சி செய்து பார்க்கலாம்.

---

**ஆசிரியருக்குக் கடிதம்**

# கோயிலைச் சொல்லி பணம் திரட்டுகிறார்களாம்

கரவெட்டி தில்லையம்பலப் பிள்ளையார் கோயிலைச் சாட்டி பணமோ பொருளோ வசூலிக்க எவரையும் அனுப்பியது கிடையாது. யான் பூசைசெய்வதற்காக தூரவுள்ள இக்கோயிலுக்குத் தினமும் போகவேண்டியிருப்பதால் அங்ஙனம் ஊர் ஊராகச் செல்வதுமில்லை.

வடமாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் இப்பழமை வாய்ந்த தில்லையம்பதிக்கு நேர்த்தி செய்ய வந்த பக்தர்கள் பலர் சிலரால் ஏமாற்றப்பட்டதாக முறையிட்டிருக்கிறார்கள். இது வருத்தத்துக்குரிய செயலாகும்.

மோசடிக்காரர்கள்மீது எச்சரிக்கையாக இருக்கும்படி தில்லையம்பல நேயர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னத்தம்பியார் கந்தப்பு
தில்லையம்பலப்பிள்ளையார்
கோவிற்பூசகரும்
உரிமையாளரும்,

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

## மேலும் 1000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, திங்கள்

ஆயிரம் பட்டதாரிகள் விரைவில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என கல்வி கலாச்சார அமைச்சர் திரு ஐ எம். ஆர் ஏ இரியகொலை தெரிவித்துள்ளார். இதற்கான விண்ணப்பங்கள் உடனடியாகக் கோரப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நியமனம் பெறும் இந்த ஆயிரம் பட்டதாரிகளும் பட்டதாரிமாணவ ஆசிரியர்கள் என்றபெயரில் நியமிக்கப்படுவர். இவர்கள் தொகுதி வாரியாக நியமனம் பெறுவார்கள்.

இதைவிட மேலும் 1000 பட்டதாரிகளுக்கும் வெற்றிடங்கள் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் மே, யூன் ஆகிய மாதங்களில் இங்கு நியமனங்கள் இடம் பெறவுள்ளன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச்மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

திரு. அ. அமிர்தலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 14, 15ந் திகதிகளில் உடுப்பிட்டித்தொகுதியில் நாவலர் மடம் என்னுமிடத்தில் சமாதான நீதிபதி திரு. வி. கே. சின்னையாவின் இல்லத்தில் தமிழரசுக்கட்சிச் செயற்கமிட்டி கூடித் தேர்தல் நிலைமைகள் பற்றி ஆராய்ந்தது.

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இச்செயற் கூட்டத்தில் கிழக்கு மாகாணத் தமிழரசு எம். பி.க்கள் எவரும் சமுகமளிக்கவில்லை. ஜனாப் மசூர் மௌலானா, திரு. டிவாஸ் முதலிய கிழககு மாகாணப் பிரதிநிதிகளும் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம் பி திரு சி கதிரவேற்பிள்ளை, கிளிநொச்சி எம் பி திரு கா பொ இரத்தினம், பருத்தித்துறை எம் பி திரு கே துரைரத்தினம், சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், திரு மு ஆலாலசுந்தரம் மற்றும் [illegible]த்தில் இரு தினங்களும் [illegible]சீலனை செய்யப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் 1965ம் ஆண்டைவிட மேலானதாக அமையுமென்றும், 1956ம் [illegible]ண்டு கட்சி தனது இலட்சியங்களைச் சாதிக்க எடுத்த முயற்சிகள் பற்றியும், சாதனைகள் பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் விரிவாகக் குறிப்பிடப்படு மென்றும் வட்டுக்கோட்டை எம். பி திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வருங்காலத்தில் கட்சியின் செயல் திட்டங்கள் பற்றியும், தீண்டாமை ஒழிப்பில் கட்சியின் நிலை பற்றியும் தமிழரசுக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படுமாம்.

கட்சியின் அடிப்படை நோக்கமாகிய அதிகாரத்தைப் பரவலாக்கும் கொள்கை. பிரதேச சபை, மாவட்ட சபை, பிரதேச சுயாட்சி முதலியவை பற்றியும் விஞ்ஞாபனத்தில் விளக்கம் தரப்படுமென அவர் சொன்னார்.

# "நாகரிக உணவினால் அற்ப ஆயுளில்மடிகிறோம்"

## உபசபாநாயகர் கவலை

உடுப்பிட்டி, திங்கள்

"எமது முன்னோர் சிறப்பாக நாட்டின் சூழ்நிலைக்கேற்ற உணவு வகைகளைக் கையாண்டு வந்ததாலேயே நீண்ட காலம்வரை உயிர் வாழ முடிந்தது. நாம் இவ்வுணவு வகைகளை கைவிட்டு நாகரீக உணவுகளை உண்ணத் தொடங்கியதால்தான் அற்ப ஆயுளில் மடிகின்றோம்."

இவ்வாறு உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம்.பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் கவலை தெரிவித்தார். வடமராட்சி இளம் பிள்ளைவாதத் தடை இயக்கத்தால் வடமராட்சிப் பகுதியில் 1969ம் ஆண்டு நடாத்தப்பட்ட இளம்பிள்ளை வாதத் தடுப்பியக்கத்தில் பணிபுரிந்ததொண்டர்களுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையில் உப சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் இப்பாராட்டுவிழா நடைபெற்றது. திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"பனைச் செல்வம் எமக்கு ஆண்டவனால் அருளப்பட்ட வரப்பிரசாதமாகும். முன்னொரு காலத்தில் பனைமரத்திலிருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகளே அக்கால மக்களின் முக்கிய உணவாக விளங்கின. இப்போது பனை மரத்திலிருந்து பெறப்படும் பிரயோசனமானவற்றைக் கைவிட்டுவிட்டு, கேடுதல் விளைவிப்பவற்றையே பாவிக்கிறோம்."

பனை மரத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் சக்தி வாய்ந்த உணவு வகைகளை தயாரிப்பது பற்றி இப்பகுதித் தாய்மார்களுக்கு விளக்கும் முயற்சியில் உடுப்பிட்டிக் காரியாதிகாரி ஆற்றிவரும் பணியை உப சபாநாயகர் பாராட்டினார்.

இக்கூட்டத்திற்கு வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். புவிராசசிங்கம் தலைமைவகித்தார்.

திருவாளர்கள் எஸ். ஜெயகாந்தன் (உடுப்பிட்டிக் காரியாதிகாரி), கணபதிப்பிள்ளை ஜே. கே. செல்வத்துரை, செல்லப்பா, வீ. எஸ். கந்தப்பு ஆகியோரும் பேசினர்: சுகாதாரப்பரிசோதகர் திரு. செல்லையா சுகாதாரப் பாட்டுகள் பாடினார்.

தொண்டர்களுக்கான சான்றுப் பத்திரங்களை உப சபாநாயகர் வழங்கினார். உடுப்பிட்டிக் காரியாதிகாரி கந்தோரிலிருந்து சுகாதார ஊர்வலம் விழா மண்டபம் வரை நடாத்தப்பட்டது.

---

பட்டோம். கஜபா[illegible]கப்பலுக்கும்அதன்வீரர்களுக்கும் கையசைத்து விடை கொடு[illegible] இறுதிக்கட்டமாக நாம் பஸ்வண்டியில் பிரயாணம் செய்து வீட்டை அடைந்தோம்

(முற்றும்)

# "இறக்குமதியைக் குறைத்து பிரச்னைகளைத் தீர்த்தோம்"

— அமைச்சர்

மாத்தளை, திங்கள்

'சுதந்திரக்கட்சி அரசாங்கம் பதவியில் இருந்தபொழுது பால் உணவு, அரிசி போன்ற உணவுப்பொருள்களை பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து பிறநாட்டு விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்த்து வைத்தது. ஆனால் நாங்கள் அப்படிச் செய்யவில்லை. வெளிநாட்டு இறக்குமதிகளைக் குறைத்து நமது நாட்டுவிவசாயிகளின் எண்ணற்ற பிரச்னைகளைத் தீர்த்து வைத்தோம்'.

போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பீ. ஹுருள்ளை தலைமையில் மாத்தளையில் நடைபெற்ற ஐ. தே. கட்சி பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'நாட்டின் நலனுக்காகத் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் மக்களுக்குச் சிறந்தசேவை செய்திருந்தால் மக்கள் ஏன் அவரது அரசாங்கத்தை தோற்கடித்தார்கள் என அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

அக்குறணை ஆட்சிமன்ற அங்கத்தவர் ஜனாப் ஏ. ஏ. ஸி ஹமீத அலுவிஹாரை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. சந்திரசேன முனவீர உட்படப் பலர் உரையாற்றினர்.

# 'ஈழத்தமிழ்பேசும் மக்கள் தனிநாடு அமைக்கவேண்டும்'

— தீவுப்பகுதி எம். பி.

ஊர்காவற்றுறை, திங்கள்

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் தங்கள் தன்மானத்தைக்காப்பாற்றவேண்டுமென்றால் தமக்கென்றொரு தனி நாட்டை அமைத்துக் கொள்ளவேண்டும். அடிக்கடி சரணாகதி அடையும் மனப்பான்மை உடையவர்களாலோ, யாழ்ப்பாணத்தில் ஒன்றும் கொழும்பில் ஒன்றும் கூறுகின்ற அரசியல்வாதிகளாலோ தமிழினம் தனது இழந்த உரிமைகளைப் பெறமுடியாது இதை இன்றைய இளைஞர்கள் நன்குணர்ந்து செயல்படவேண்டும்."

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினரும், தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவருமான திரு. வ. நவரத்தினம், புங்குடுதீவு வல்லன் கிராம முன்னேற்றச்சங்க விசேஷ கூட்டமொன்றுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. வ. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தீவுத்தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சகல பாகங்களையும் ஒரே கண்ணோட்டத்துடனேயே நோக்கிவருகிறேன்.

ஆட்சிமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் என்னால் இயன்றளவு எனது தொகுதியின் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளேன். புங்குடுதீவுக்கிராமத்துக்கு குழாய்நீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை எனது ஆட்சிமன்றக் கன்னிப்பேச்சிலேயே எடுத்துக்கூறியுள்ளேன். அன்றைய அரசாங்கம் இதைச் செய்யத் தவறிய போதும், இன்றைய அரசாங்கத்திடமும் இதுபற்றி வாதாடியதால் நீண்டகாலப் பிரச்னையான இதைத் தீர்த்து வைப்பதற்கென ஒன்றரை இலட்சம் ரூபாய் உள்ளூராட்சி அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய வேலைகளை புங்குடுதீவு கிராமசபை விரைவில் செயற்படுத்துமென நம்புகிறேன்.

தமிழ் பேசும் மக்களுக்குச் சரியான பாதையை காட்டுவதற்காக எதிர்வரும் பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிடவுள்ளேன்.

தமிழ்பேசும் மக்களை சந்தேகப் பிரஜைகளாக்கும் அடையாள அட்டை மசோதா விவாதத்தின் போது நான் நடந்துகொண்டது சரியா? பிழையா? என்பதற்குரிய பதிலையே எதிர்வரும் பொதுத் தேர்தலில் நான் எதிர்பார்க்கிறேன். எனது தொகுதிமக்கள், தமிழினம் நிரந்தர அடிமையாக வாழவேண்டுமென்று விரும்பமாட்டார்கள் என்று நம்புகிறேன் இதைச் செயற்படுத்தத்தமிழ் வாலிபர்கள் முன்னின்றுழைக்கவேண்டும் என்றார்.

கிராமத்தின் தேவைகள் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

---

[illegible]தார்.

# செய்திச் சுருக்கம்

## இலங்கையிலிருந்து திரும்பினர்

"அப்பலோ-12" விண்வெளி வீரர்களான சார்ள்ஸ் கொன்ராட், ரிச்சார்ட் கோர்டன், அலன்பீன் ஆகிய மூவரும் தமது மூன்று நாள் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுக்காலை ரங்கூன் நோக்கிப் பயணமானார்கள்.

## புதிய தளபதி

அட்மிரல் ஜெனரல் ராஜன் கதிர்காமர் தனது பதவியில் இருந்து ஒய்வு பெறுவதைத் தொடர்ந்து கமாண்டர் ஹன்ரர் புதிய தளபதியாக நேற்று பதவி ஏற்றார்.

## உர உற்பத்தி தொழிற்சாலை

சாகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குப்பக்கத்திலுள்ள 140 ஏக்கர் நிலத்தில் சுமார் 35 கோடி ரூபா செலவில் பிரமாண்டமான உர உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. இதை நிர்மாணிக்கும் பொறுப்பு ஒரு ஜப்பானிய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்[ளது].

## மரண அறிவித்தல்

**செல்லப்பா பொன்னுச்சாமி**

சின்னம்மாவின் அன்புக் கணவரும் மனோன்மணி தேவியின் அருமைத் தந்தையும் குமாரசாமி இராசம்மா, பூரணம்மா ஆகியோரின் சகோதரரும் மலாயன் பென்சனியர் காலஞ்சென்ற சரவணமுத்துவின் மைத்துனருமாகிய மலாயன் பென்சனியர் செல்லப்பா பொன்னுச்சாமி காலமாகி விட்டார். அன்னாரின் பூதவுடல் அச்சுவேலி பத்தமேனியில் இருக்கும் அவரின் இல்லத்திலிருந்து 17-3-70 செவ்வாய்க்கிழமை 2 மணியளவில் தகனக்கிரிகைக்களுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

1924

---

கள் தெரிவித்த புகாரை அடுத்து அமைச்சர் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டார்.

திரு. நந்தா டெல்லிக் கருகிலேயுள்ள காஜியாபாத் நிலையத்துக்குத் திடீரென்று சென்று அங்கு ஒரு மணி நேரச் சோதனை நடத்தியதோடு புகைவண்டி நிலையச் சிற்றுண்டிச்சாலையை பார்வையிட்டார் அதிகாரிகள், வியாபாரிகள், மாணவர்கள் பிரயாணிகள் ஆகியோர்களையும் விசாரித்து தகவல்களை அறிந்துகொண்டார்.

## இரங்கற் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சைவவித்தியா விருத்திச் சங்க அதிபரும், பிரபல தமிழ்ச் சைவத் தொண்டருமாகிய திரு சு இராசரத்தினம் காலமானதையிட்டு வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடந்த 13ம் திகதி துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு கு. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆசிரியர்கள் பலர் அன்னாரின் பிரிவைக்குறித்து இரங்கலுரையாற்றினர் அன்றையதினம் பாடசாலை மூடப்பட்டு கறுப்புக் கொடி தொங்கவிடப் பட்டிருந்தது.

## வைத்திய கல்லூரி நூற்றாண்டுவிழா

கோட்டை, திங்கள்

கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பிரிவினால் வைத்திய கண்காட்சி ஒன்றையும் லாட்டரிசுவீப் ஒன்றையும் நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

இவை மூலம் பெறப்படும் பணம் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் வைத்தியக்கல்லூரியின் நூறுவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்குப்பயன்படுத்தப்படும்.

இந்த வைத்தியக் கல்லூரி நூற்றாண்டையொட்டி உலக சௌக்கிய நிறுவனத்தின் உதவியோடு கருத்தரங்கம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
ஞாயிறு, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**தாய்சொல்லைத் தட்டாதே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org